# ஆற்றல்

International
Current Affairs



## சர்வதேச செய்திகள்

17

- ஆய்வுகள் , அபிப்பிராயங்கள் , பின்னணிகள்


➢ 03 சர்வதேச செய்திகள்.
➢ 06 முகாமைக் கணக்கீடு.
➢ **08 Sir Don Bradman.**
➢ 09 வணிகக் கல்வியும் கணக்கீடும்.
➢ 12 காப்புறுதி.
➢ **14 Stories with Ken Uncle.**
➢ **16 English Lesson.**
➢ 20 ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி.
➢ 29 சிறுகதை.
➢ 31 உங்கள் கேள்விகள்....!!!
➢ 33 பொது அறிவு துணுக்குகள்.


பொது அறிவு - சர்வதேச செய்தி

35 பக்கம் 10 /-

தொண்டர் சமூக சேவை நிறுவனம்: அரச பதிவு

## ஒரு நிமிடம் . . .

"ஆங்கிலம்" ஒரு யதார்த்தக் குறைவான மொழி என பல நாட்டவர்களது பேதமற்ற அபிப்பிராயம். இருந்தும், பெரும்பான்மையான நாடுகள் ஆங்கிலத்தை இன்று "உலக பாஷையாக" ஏற்றுள்ளன.

இந் நிலைக்கு, உங்களுக்கு தெரிந்த பல காரணங்கள் உண்டானாலும், ஐக்கிய அமெரிக்கா வினது துடிப்பான, கவர்ச்சியான, பொருத்தமான innovation முறையே முக்கிய காரணமாகும்.

Innovation என்பது பண்டைய, காலம் கடந்த விதிகளை பிடிவாதமாக, எமது பாரம்பரியம் என இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டிராமல், சிறிது இளக்கி மெல்ல சிந்தனையால் விட்டுக் கொடுப்பதிலேயே தொடங்குகின்றது innovation.

தேவைக்கு, குறித்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப; புதிய, கவர்ச்சியான, பொருத்தமான மாற்றத்தை உருவாக்கும் செயலே innovation!

நவீன காலத்தில், எத் துறையை நோக்கினாலும், தகவல் பரிமாறலில் ஒரு மாற்றத்தைக் காணலாம்.

முன்பு மேலிடத்தில் இருந்தோ, பிறிதோர் இடத்தில் இருந்தோ கிடைத்த தகவலை, தெய்வ வாக்காக ஏற்றுக் கொள்வர்.

ஆனால் இன்றோ, கிடைத்த தகவலை அக்குவேறு ஆணி வேறாக பிரித்து, Parts Parts ஆக களத்தி ஆராய்ந்து, பிழைகளையும் குறைகளையும் சுட்டிக் காட்டுமாறு தகவல் அனுப்பியோரே வேண்டுவர்!

அது மட்டுமல்ல, மூலத் தகவலின் நோக்கை அடைய, வேறு மார்க்கமோ, உத்தியோ உதிக்குமானால் அதனையும் தந்தருள்கவென இறைஞ்சுவர்!!

இத்தணிகய தகவல் எதிரொலியை விபரிப்பதற்கே அமெரிக்கர்களால் "Feedback" எனும் சொல் உருவாக்கப்பட்டது. எவ்வளவு பொருத்தமான சொல் எனப்பார்த்தீர்களா?!

Feedback கண்டனமானால், குற்றம் குறைகளை நிவர்த்தி செய்து அல்லது தவிர்த்து மேம்பட ஏதுவாகும். புகழாரமானால் ஈடுபட்டோர்க்கு உத்வேகமளித்து மேலும் பலருக்கு நன்மை பயர்க்க உதவும்.

வாசகர்களான உங்களுக்கு "ஆற்றல்" சம்பந்தமாக உதிக்கும் எண்ணங்களை எம்முடன் பகிருங்கள். Feed back தாருங்களேன்!

நாம்பல அன்பர்களுக்கு நல்லெண்ணத்துடன் ஆற்றல் தபால் மூலம் அனுப்புகின்றோம். அனுப்பியவை கிடைத்தனவா என நாமறியோம்! கற்பனை இருட்டில் தடுமாறுகின்றோம்!!

உங்களது **Feedback** மட்டுமே எம்மை இப் பணியில் தொடர்ந்து வளர்க்கும்!!!

எமது பிரயத்தனம் உங்களுக்கு உபயோகமானதாவென பாடசாலை அதிபர்,ஆசிரியர்,மாணவரிடமிருந்து அறிய ஆவலாக உள்ளோம்.

எமக்கெனப் பெற்ற மணி ஓடரை சாதாரண தபாலில் அனுப்பினால் போதுமானது. தாமதிக்காது அனுப்பினால் மெத்தப் பெரிய உதவியாகும்.

நன்றி,

ஆ . . . ர்

## இன்றைய உலகம் WORLD TODAY.
## "சர்வதேச செய்திகள்" --- Current Affairs

(1) South Africa – Durban நகரில் இவ் வருடம் 9ஆம் மாதம் ஐ.நா சபை யினது அனுசரணையில் சர்வதேச நாடுகள் Racism and Slavery (இனவாதம் / இனவெறியும் மக்களை அடிமைப்படுத்தல்) என்னும் கருத்தரங்கு நடாத்தின.

யூத மக்களது Zionism என்னும் கோட்பாடு இனவாதம் என தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனை எதிர்த்து Israel உடன் USA நாட்டு பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தனர்.

இதன் பின்னர் தென் ஆபிரிக்கா, சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனும், வேறு சில கட்டமைப்புக்களைச் சேர்ந்த நாடுகளுடனும், இணைந்து சகல நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய தீர்மானம் ஒன்றினை, கடைசி நாளன்று உருவாக்கிக் கொண்டனர்.

ஆபிரிக்க நாடுகளிற் பல தமது மக்களை அடிமைப்படுத்தியதற்காக மேற்கத்தைய நாடுகளிடம் இருந்து மன்னிப்புக் கோரிக்கையும், நட்ட ஈட்டையும் வற்புறுத்தினர். ஆனால் மன்னிப்பு கோரவும், நட்ட ஈடு கொடுக்கவும் முடியாது, அபிவிருத்திக்கென பண உதவி தருவோம் என கூறியுள்ளனர் மேற்கத்திய நாடுகள்.

(2) Australia – நோர்வே நாட்டு கப்பல் ஒன்று இந்தோனேசியாவை அண்மித்த நாடுகளுக்கிடையில் வியாபாரப் பொருட்களை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருந்தது.

சில வாரங்களுக்கு முன்பு Australia க்கு சொந்தமான Christmas Island க்கு அருகில் 430 அப்கான் (Afghan) அகதிகளை தாழ்ந்து கொண்டிருக்கும் படகொன்றிலிருந்து நோர்வே கப்பல் காப்பாற்றியது.

ஆனால் Australia அவர்களை தனது நாட்டில் தரையிறங்க அனுமதி மறுத்து, தனது துருப்புக் கப்பல் ஒன்றில் ஒரு பகுதியினரை சின்னஞ் சிறிய பசுபிக் சமுத்திர தீவான Nauru வுக்கும், எஞ்சியவரை நியூஸிலாந்து நாட்டிற்கும் அந் நாடுகளின் நல்லெண்ண இணக்கத்துடன் அனுப்பி வைத்தது.

Nauru தீவினது அபிவிருத்திக்காக ஒஸ்ற்றேலியா 10 மில்லியன் டொலர்கள் அளிப்பதாக உறுதி கூறியுள்ளது.

Human Traffic மூலம் பெரும் தொகையான பணத்தை சம்பாதிக்கும் குழுவினரே இந்த அகதி விவகாரத்தால் அநியாய லாபமடைகின்றனர் இவர்களது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவே நாம் அகதிகளை ஏற்க மறுத்தோம், என்கின்றது ஒஸ்ற்றேலியா அரசாங்கம். இவ் அகதிகளில் ஒரு பகுதியினரை ஏற்றுக்கொள்ள நோர்வே அரசாங்கம் மறுத்துவிட்டு மனித தத்துவம் பேசுவது ஞாயம் அல்ல எனவும் மேலும் கூறியது.

(3).Northern Ireland – Belfast நகரில் உள்ள கத்தோலிக்க Holy Cross Convent பாடசாலை ப்றொரெஸ்ரான்ற் (protestant) மக்களது குடிமனைகளால் சூழ்ந்துள்ளது. 9ஆம் மாதம் பாடசாலை தொடங்கியதும் கத்தோலிக்க பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு கூட்டிச் சென்றபோது 200க்கும் அதிகமான ப்றொற்றெஸ்ரான்ற் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்து பயமுறுத்தினர் பொலிசாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பளித்தனர்.

மூன்றாம் நாள் ஒரு குண்டொன்று வெடித்து நான்கு பொலிஸ்சார் காயமடைந்தனர்.

கடந்த 400 வருடங்களில் இவ் இரு பகுதியினருக்கும் இடையில் போரில்லாத காலம் மிகவும் சொற்பமே!

"உனக்குத் தீங்கிழைத்தவனை மன்னிப்பாயாக" என போதித்த யேசு நாதர் மகானை வணங்குவோரே இவ்விரு பகுதியினரும் என்பதே விசனத்திற்குரிய விஷயம். இப்போது போர் நிறுத்தம் முறிந்து விட்டது.

(4) Netherlands – Hauge நகரில் இயங்கும் War Crime Tribunal முன்பு Yugoslovia நாட்டு முன்னாள் நாசகார ஜனாதிபதி Slobodan Milesovich இரண்டாவது தடவையாக ஆஜராக்கப்பட்டார்.

இம் முறையும் இவர் போர் குற்ற விசாரணைக்குழு வை ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆறு வருடங்கள் முன்பு இவர் தொடங்கிய Bosnia போரில் தோற்றதும், சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடும் போது, இதே விசாரணைக் குழுவுடன் காலம் வரும் போது ஒத்துழைப்பதாக உறுதியளித்தார்.

Bosnia முஸ்லிம் பெண்களை கற்பழிக்கும் முகாம்களில் அடைத்து, தனது துருப்புகளை ஏவிவிட்டு, ஆயிரக் கணக்கான பெண்களை மானபங்கப்படுத்தி, அவர்களை கலப்பு பிள்ளைகளை பெற்றுக் கொள்ள வைத்தார். இத்தகைய குற்றத்தை அடொல்F ஹிற்லர் தன்னும் புரியவில்லை!

(5) United States of America – New York, Washington D.C. நகரங்களில் 11ம் திகதி 09ஆம் மாதம் இவ் ஆண்டு காலை 09 மணியளவில் பயங்கரவாத தற்கொலை தாக்குதல் நடைபெற்றது. இதில் 5 ஆயிரத்துக்கு மேலான மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 39 நாடுகளுக்குச் சேர்ந்த பிரஜைகளும் அடங்குவர்.

உலகத்தின் அதி உயரமான கட்டடங்களில் ஒன்றான New York நகரது Manhattan தீவில் உள்ள World Trade Center மீது இரு விமானங்கள், ஒரு சில நிமிட வித்தியாசத்தில், வேண்டுமென்றே மோதின.

உலகத்தின் அதி உன்னத நாற்படை கூட்டுக் குழுவினது தலைமையகமான Pentagon கட்டடம் மீது 3வது விமானம் மோதியது. இக் கட்டடம் 5 கோண வடிவத்தில் கட்டப்பட்டது. பூமிக்கடியில் 5 மாடிகளைக் கொண்டது.

நான்காவது விமானம் அமெரிக்காவினது கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள Pensylvania மாநிலத்தில் வீழ்ந்து அநர்த்தங்களை ஏற்படுத்தியது.

இந்த நான்கு உள்நாட்டு விமானங்களையும் அமெரிக்காவினது வெவ்வேறு நகரங்களில் இருந்து பயணித்தபோது, மொத்தமாக 19 நபர்களே, கடத்திச் சென்றுள்ளனர் என FBI விசாரணைகளில் தெரிய வருகின்றது.

இவர்களில் 18 நபர்கள் அமெரிக்காவில் விமானம் ஓட்டுவதற்கு பயிற்சி பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தாம் வாழ்ந்த பகுதிகளில் அயலவர்களால் பண்பாளவர்கள், விவேகமானவர்கள், அமைதியானவர்கள் என வர்ணிக்கப்படுகின்றனர். அமெரிக்காவில் வாழ்ந்து, படித்து, அந்நாட்டின் உன்னத வாழ்க்கைத் தராதரத்தை அனுபவித்த இவர்கள், எவ்வாறு இத்தகைய அமெரிக்க சமுதாய வெறுப்பை மனதில் வளர்த்து, கடத்திய விமானங்களில் பயணித்த பிரயாணிகளுடன் தற்கொலை தாக்குதலை நடாத்தினார்கள் ?

நான்கு விமானங்களிலும் 266 பயணிகள் உயிரிழந்தனர். இந்த அசம்பாவிதத்தின் உடன் காரணிகளான 19 நபர்களது பெயர்களும் மத்திய-கிழக்கு ஆசியா பகுதிக்குரியவை என அறியவந்துள்ளது.

New york நகரது விமான நிலையத்தில் ஒருவர் வேறு நபருக்கு வழங்கிய விமானம் ஓட்டும் லைசன்ஸ் உடன் பிடிபட்டார். 25 நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். Germany யினது Hamburg நகரில் நாசகார விமான ஓட்டுனர்களது 19 நபர்களில் ஒருவரது சிநேகிதி விமானம் ஓட்டும் பயிற்சி சம்பந்தமான ஆவணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீவிரமாக முடுக்கி விட்டுள்ள பன்நாட்டு விசாரணைகள் சர்வதேச பயங்கரவாதியான சவுதி அரேபிய இளவரசன் Osama Bin Laden தான் காரண கர்த்தா என தெரிய வருகின்றது.

ஒரு சில முஸ்லிம் நாடுகளைத் தவிர ஏனைய சகல நாடுகளும் அனுதாபம் தெரிவித்ததுடன் பயங்கரவாதத்தை அழிக்க அமெரிக்காவுடன் இணைத்துள்ளன.

**Afghanistan** ல் ஒழிந்து வாழும் Osama bin Laden ஐ அமெரிக்கா தேடுகின்றது. அந்நாட்டின் ஆட்சியாளர்கள் Taliban குழுவினர் இவர்களது தலைவர் Mullah Mohamed Omar. இவரும் Bin Laden ம், ஈராக் நாட்டு ஜனாதிபதி Saddam Hussain ம். "நாம் இதை செய்யவில்லை, ஆனால் செய்தோரை போற்றுகின்றோம்," என அறிவித்துள்ளனர்.

Taliban அரசாங்கத்தை அங்கீகரித்த நாடுகளான Saudi Arabia வும் United Arab Emirates ம் அமெரிக்காவுக்கு பயங்கரவாதத்தை அழிக்க உதவுவதாக உறுதி அளித்துள்ளனர். Taliban இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் பக்க பலமாக தொடக்கத்தில் இருந்து உதவி வந்த Pakistan, தனது நாட்டுக்கு மேலாக America தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என உத்தரவு வழங்கியுள்ளது.

தனக்கெதிராக உதவி வழங்குவோரை தாக்குவோம் என Omar கூறியுள்ளார். Bin Laden னை America விடம் ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்ள Pakistan தூதுக்குழு சென்றுள்ளது, இத் தொகுப்பை நாம் எழுதும், பொழுது முன்பு ஒரு முறை இவ்வாறான முயற்சியில் Pakistan தோல்வி கண்டது! .... அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்

(6) Nigeria – ஆபிரிக்க கண்டத்தின் விசாலமான நாடுகளில் ஒன்று Nigeria. இது மசகு எண்ணை தயாரிக்கும் நாடு. இதனது மசகு எண்ணை முதற் தரமானது. ஆதலால், இது உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றாக திகழ வேண்டும். இருந்தும், இதுவே உலகின் மசகு எண்ணை தயாரிக்கும் நாடுகளில் மிகவும் வறிய நாடாக உள்ளது.

காரணம், பொருளாதார திருட்டு, இதனது முன்னாள் ஜனாதிபதியான சர்வதிகாரி ஜெனறல் Abubachcha நூற்றுக் கணக்கான கோடி டொலர்களை திருடியுள்ளார். தனது காலத்தில், இவர் தனது வர்த்தக நண்பர்களுடன் கூடி மது அருந்தி மகிழ்ந்திருக்கும் போது, திடீரென மயக்கமுற்று வீழ்ந்து மடிந்தார்.

தற்போதைய, தேர்தலில் வென்ற ஜனாதிபதி Olusegun Obasanjo தனது நாட்டினது முஸ்லிம் மற்றும் கிறிஸ்ரியன் மக்களுக்கிடையில் அடிக்கடி வெடிக்கும் வன்செயல்களை தடுக்க இயலாது திண்டாடுகின்றார். இவர் Nigeria நாட்டினது இராணுவ இளைப்பாறிய முன்னாள் ஜெனறல் ஆவா

(21ஆம் பக்கம் பார்க்க

## முகாமைக் கணக்கீடு - Management Accounting

க.பொ.த உயர்தரம், மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் புதிய விடயங்களை உள்ளடக்கி விசேடமாகத் தொகுக்கப்பட்டது.

ஆக்கியோன் : S.D.J சுதர்சன் 118 3/1 W.A சில்வா மாவத்தை,
வெள்ளவத்த, கொழும்பு- 6 T.P 01-599432 / 075-515742

### 04) இணைப்பு விகிதம் அல்லது மூலதனக் கட்டமைப்பு விகிதம் அல்லது நீண்டகாலக் கடன் தீர்க்கும் விகிதம் - Gearing Ratio.

நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையையும் மூலதனக் கட்டமைப்பிலனயும் மதிப்பாய்வு செய்வதற்கு பயன்படும் விகிதங்களே இணைப்பு விகிதங்கள் ஆகும்.

நீண்டகாலக்கடன் தீர்க்கும் விகிதங்கள் வருமாறு:-

4:1 மூலதன இணைப்பு விகிதம்
4:2 பங்குதாரர் நிதிக்கும் மொத்தச் சொத்துக்குமான விகிதம்
4:3 கடனுக்கும் மொத்த சொத்துக்கும் இடையிலான விகிதம்.
4:4 கடனுக்கும் பங்குதாரர் நிதிக்கும் இடையிலான விகிதம்
4.5 நீண்டகாலக் கடனுக்கும் பங்குதாரர் நிதிக்குமான விகிதம்.
4.6 வட்டிக் காப்பு விகிதம்.

### 4:1 மூலதன இணைப்பு விகிதம் / நெம்பு கோலியக்க விகிதம் / சமநிலை விகிதம் / Capital Gearing Ratio.

நிலையான வருமானத்தை உழைக்கும் கடன் மூலதனத்துக்கும் சாதாரண பங்குதாரர் நிதிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குவதே மூலதன இணைப்பு விகிதம் ஆகும்.

$$\text{மூலதன இணைப்பு விகிதம்} = \frac{\text{முன்னுரிமைப்பங்கு முதல்} + \text{நிலையான வட்டி உழைக்கும் கடன் முதல்.}}{\text{சாதாரண பங்குமூலதனம்} + \text{ஒதுக்கங்கள்.}}$$

நடைமுறையில் இவ்விகிதம் 1:1 ஆக இருப்பின் நிறுவனத்திற்கு நல்லது. இதனை சம இணைப்பு எனவும் 0.6:1 க்கு கூடுதலாக இருந்தால் உயர் இணைப்பு எனவும் 0.2.1 க்கு குறைவாக இருந்தால் தாழ் இணைப்பு எனவும் அழைப்பர்.

### 4:2 பங்குதாரர் நிதிக்கும் மொத்தச் சொத்துக்குமான விகிதம் Share holders fund to total Assets Ratio.

பங்குதாரரது நிதிக்கும் (சாதாரண பங்கு முதல் + முன்னுரிமைப்பங்கு முதல் + ஒதுக்கம்) மொத்தச் சொத்துக்கும் இடையிலான தொடர்பினை இவ்விகிதம் விளக்கும்.

$$\text{பங்குதாரரது நிதிக்கும் மொத்த சொத்துக்குமான விகிதம்} = \frac{\text{பங்குதாரரது நிதி}}{\text{மொத்தச் சொத்து}}$$

### 4:3 கடனுக்கும் மொத்தச் சொத்துக்கும் இடையிலான விகிதம் - Debts to Total Assets Ratio.

நிறுவனத்தில் உள்ள மொத்தக் கடனுக்கும் மொத்தச் சொத்துக்கும் டையிலான தொடர்பினை வெளிப்படுத்துவதே இதுவாகும்.

$$\text{னுக்கும் மொத்தச் சொத்துக்கும் இடையிலான விகிதம்} = \frac{\text{மொத்தக்கடன்}}{\text{மொத்தச்சொத்து}}$$

4: 4 கடனுக்கும் பங்குதாரரது நிதிக்கும் இடையிலான விகிதம்

**Debt to share holders fund Ratio**

இது மொத்தக் கடனுக்கும் பங்குதாரரது நிதிக்கும் இடையிலான தொடர்பினை வெளிக்காட்டுகின்றது.

$$\text{கடனுக்கும் பங்குதாரரது நிதிக்கும் இடையிலான விகிதம்} = \frac{\text{மொத்தக் கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$$

4:5 நீண்ட காலக் கடனுக்கும் பங்குதாரர் நிதிக்கும் இடையிலான விகிதம்

**Long term debt to share holders fund Ratio.**

இது நீண்டகாலக் கடனுக்கும் பங்குதாரரது நிதிக்கும் இடையிலான தொடர்பினைக் வெளிக்காட்டும்.

$$\text{நீண்டகாலக்கடனுக்கும் பங்குதாரர் நிதிக்கும் இடையிலான விகிதம்} = \frac{\text{நீண்டகாலக்கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$$

4:6 வட்டி காப்பு (மீட்பு) விகிதம் - **intrest coverage Ratio.**

வரி வட்டி கழிக்கப்படுமுன் உள்ள இலாபத்திற்கும் வட்டிக்கும் இடையிலான தொடர்பினை வட்டியின் மடங்குகளாக கணிப்பதன் மூலம் வட்டி மீட்பு விகிதம் பெறப்படும்.

$$\text{வட்டி மீட்பு விகிதம்} = \frac{\text{வட்டி, வரிக்கு முந்திய வருமானம்}}{\text{வட்டி}}$$

(05) முதலீட்டு விகிதங்கள் - **Investment Ratios**

முதலீட்டாளர் முதலீடு செய்யும் போது பல்வேறு காரணிகளை ஆராய்ந்தே முதலீடு செய்ய முன்வருவார்கள். இந்தக் காரணிகளை முதலீட்டாளர் தீர்மானங்களுக்கமைய இலகுபடுத்திக் கொடுக்கும் கருவியே முதலீட்டாளர் விகிதங்கள் எனப்படும்.

முதலீட்டு விகிதங்கள் வருமாறு

5:1 பங்கொன்றுக்கான உழைப்பு
5:2 விலை உழைப்பு விகிதம்
5:3 உழைப்பு விளைவு விகிதம்
5:4 பங்கொன்றுக்கான பங்குலாபம்
5:5 பங்கிலாப விளைவு விகிதம்.
5.6 சாதாரண பங்கொன்றுக்கான தேறிய புத்தகப் பெறுமதி
5.7 பங்குஇலாப காப்பு விகிதம்

5.1 பங்கொன்றுக்கான உழைப்பு- **Earning per share Ratio**

வரி, முன்னுரிமைப் பங்கிலாபம் ஆகியன கழிக்கப்பட்ட பின்னர் உள்ள இலாபத்தினை சாதாரண பங்குகளின் எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் இது கணிக்கப்படும்.

$$\text{பங்கொன்றுக்கான உழைப்பு விகிதம்} = \frac{\text{வரி, முன்னுரிமை பங்குலாபம் கழித்த பின் இலாபம்}}{\text{சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$$

5:2 விலை உழைப்பு விகிதம் **-Price Earning Ratio**

சாதாரண பங்கொன்றின் சந்தை விலைக்கும் சாதாரண பங்கொன்றிற்கான உழைப்புக்கும் இடையிலான தொடர்பினை இவ் விகிதம் வெளிக்காட்டும்.

$$\text{விலை உழைப்பு விகிதம்} = \frac{\text{சாதாரண பங்கொன்றுக்கான உழைப்பு}}{\text{சாதாரண பங்கொன்றின் சந்தை விலை}}$$

(24ஆம் பக்கம் பார்க்க)

## Sir Donald Bradman
## The Greatest Batsman Ever:

சென்ற இதழில் இவரது சாகசங்களில் சிலவற்றைப் பார்த்தோம். மிகுதியில் சிலதை இப்போ பார்ப்போம். உலகின் அதிஉன்னத BATSMAN என்றாலும், இவரது முழுமையான விபரங்களை "ஆற்றல்" தாங்காது!

Sir Don Bradman தனது முதல் தர (First Class) ஆட்டத்தை 1927ம் ஆண்டு தொடக்கம் 1949 வரை ஆடினார். 338 இனிங்ஸ்களில், 117 சதங்களை அடித்து, 20,867 ஓட்டங்களைப் பெற்றுக் குவித்தார். இச் சாதனையில், 43 தடவைகள் இவர் ஆட்டம் இழக்கவில்லை. (COB என்பர். Carried Over Bat). Sir Don முதல் தர போட்டிகளில் எடுத்த சராசரியானது 95.14 runs ஆகும்.

இப்போட்டிகளில், ஒரு தடவை, 49 "4s" அடித்து, 415 நிமிடங்களில் 452 ஓட்டங்கள் விளாசினார். முதல் தர ஆட்டங்களில் 06 தடவைகள் இரட்டைச் சதங்கள் அடித்த ஒரே வீரர் இவரே! Test Matches களை 1928ம் ஆண்டு தொடக்கம் 1948 வரை ஆடியுள்ளார். சென்ற இதழிற் கூறியவாறு, 1939ல் இருந்து 1946 வரை இரண்டாவது உலக யுத்தம் காரணமாக ரெஸ்ற் போட்டிகள் நடைபெறவில்லை. . . 08 வருடங்கள்;!!

England க்கு Australia வுக்காக நான்கு தடவைகள் சென்றார். ஒவ்வொரு முறையும் 2,000 ஓட்டங்களுக்கு குறையாமல் அடித்துள்ளார். 1930ம் ஆண்டு 2,960 runs; 1934ல் 2,020; 1938ல் 2,429; பின்னர் 1948ல் 2,426 அடித்துள்ளார்.

ரெஸ்ற் போட்டிகளில் 80 இனிங்ஸ் களில், 10 தடவைகள் ஆட்டம் இழக்கவில்லை. மொத்தமாக அடித்த ஓட்டங்கள் 6,996. இவற்றில் இரு தடவைகள் 300 runs களுக்கு கூடுதலாகவும், ஒரு தடவை 299ல் இருந்தபோது கடைசிப் partner ஆட்டம் இழந்ததால் மூன்றாவது தடவையாக 300ய் எட்டும் வாய்ப்பை இழந்தார். மேலும், 29 தடவைகள் 200க்கு மேல் அடித்துள்ளார்.

ரெஸ்ற் போட்டிகளில் இவரது சராசரி 99.94 runs கள் ஆகும். இவர் கடைசித் தடவையாக ஓடுகளத்தில் இறங்கும் போது, இவரது சராசரி இன்னும் உயரும் என இயல்பாக சகலரும் எதிர் பார்த்தார்கள்.

துர் அதிர்ஷ்டவசமாகவும், வெகு அபூர்வமாகவும், சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டம் இழந்தார். புகழாரம் சூட்ட இயலாது ஏமாந்த பத்திரையாளர்கள், பொய்யும் புளுகும் கற்பனையில் கலந்து எழுதுவது தானே வழக்கம்!! அது போன்று, "Bradman நினைத்தார்: "எனது சராசரி runs இன்று 100ய் எட்டுமோ அல்லது அதற்கு மேலேயே போய் விடுமோ", என நினைக்கும் போது Bradman னது கண்கள் கலங்கின, அதனால் அவரது பார்வை குழம்பியது, இதனால் பந்தை சரியாக கவனிக்க இயலாது விக்கற்றை இழந்தார்", என எழுதினார்கள்.

தோல்வியை சுமுகமாக ஏற்றுக் கொள்பவரும், தனது தவறுதலுக்கு சாட்டுச் சொல்ல விரும்பாத Bradman இக் கற்பனைக் கருத்தை "Hogwash" என வன்மையாக கண்டித்து. கூறினார்: "ஓர் தவறு செய்தேன், ஆட்டமிழந்தேன், அவ்வளவு தான்"

(27 ஆம் பக்கம் பார்க்க)

## வணிகக் கல்வியும் கணக்கீடும்
## (BUSINESS STUDIES AND ACCOUNTING).

தொடர்-2 கொழும்பில் இருந்து திரு.S.D.J சுதர்சன்.

தரம் 10, 11 மாணவர்களுக்கும் A/L ஆரம்ப மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் விசேடமாகத் தொகுக்கப்பட்டது.

### வணிகப் பின்னணியும் வளர்ச்சியும் அலகு- 01

#### நுகர்வுப் பொருட்களைப் பயன்படுத்தும் அடிப்படையில் வகைப்படுத்தல்

1) குறுங்காலப் பாவனைப் பொருள்
2) நீண்டகாலப் பாவனைப் பொருள்
3) வசதிப் பொருட்கள்
4) கடைப் பொருட்கள
5) சிறப்புப் பொருட்கள்
6) நாடாப் பொருட்கள்.

**குறுங்காலப் பாவனைப் பொருள் :-** நுகர்வுடன் முடிவடையும் குறுங்காலப் பயன்பாடுடைய பொருட்கள் குறுங்காலப் பாவனைப் பொருள் ஆகும்.
உதாரணம் :- குளிர்பானங்கள், தின்பண்டங்கள்.

**நீண்டகாலப் பாவனைப் பொருட்கள்:-** மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய திடமான பொருட்கள் நீண்டகாலப் பாவனைப் பொருள் ஆகும்.
உதாரணம்:- ஆடைவகைகள், பாதணிகள்.

**வசதிப் பொருட்கள் :-** நுகர்வோர் தீர்மானம் எதுவுமின்றி தமது வசதிக்கேற்ப பண்டத்தின் தரத்தின் அடிப்படையில் கண்டவுடன் கொள்வனவு செய்யும் பொருட்கள் வசதிப் பொருட்கள் ஆகும்.
உதாரணம் :- மதுபானம், சிகரட், பத்திரிகைகள்.

கொள்வனவு செய்ய உள்ள நுகர்வோர் பல கடைகளுக்கும் சென்று ஒப்பிட்டு தெரிவு செய்து கொள்வனவு செய்யும் பொருட்கள் கடைப்பொருட்கள் ஆகும். உதாரணம் :- ஆடை, பாதணிகள், தளபாடங்கள்.

**சிறப்புப் பொருட்கள்:-** வாடிக்கையாளர் மத்தியில் பிரபல்யம் பெற்ற பண்டப்பெயர், பண்டக்குறியைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் சிறப்புப் பண்டம் ஆகும். இவ்வகைப் பொருட்களுக்கு ஒப்பீடு, தெரிதல் காணப்படமாட்டாது.
உதாரணம்:- வானொலி – National, மோட்டார் சைக்கிள் - Honda.

**நாடாப் பொருட்கள் :-** குறிப்பிட்ட சில நிகழ்வுக்குப் பின்னரே தேவை நினைவுக்கு வரும் பொருட்கள் நாடப்பெறாத பொருட்கள் ஆகும்.
உதாரணம்: - கல்லறைக் கல், கலைக்களஞ்சியம்.

#### உற்பத்திச் செயற்பாடுகள்.

**உற்பத்தி:-**

மனித தேவைக்கேற்ப பொருட்களையும் சேவைகளையும் வெளியிடல் உற்பத்தி ஆகும். நுகர்வோர் தேவைக்கேற்ப வளங்களின் தன்மைகளை மாற்றியமைப்பதன் மூலம் அதன் பெறுமதி அதிகரித்தல் உற்பத்தி ஆகும்.

பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகள் வருமாறு:

1. பொருளின் உருவத்தை மாற்றுதல் - களிமண் மட்பாண்டமாக மாற்றுதல்.
2. இடத்தை மாற்றுதல் - காட்டிலுள்ள பழங்களை நகரங்களுக்கு கொண்டு வருதல்.
3. காலத்தை மாற்றுதல் - களஞ்சியப்படுத்தி அருமையான காலத்தில் பண்டங்களை விற்றல்.
4. கோப்புச் செய்தல் - மண், நிலை, கதவு, சீமெந்து கொண்டு வீடமைத்தல்.

**உற்பத்தி தொழிற்பாடு**

பொருட்கள் சேவைகளை வெளியீடாகப் பெறும் பொருட்டு உற்பத்திக் காரணிகளை உள்ளீடாகக் கொண்டு மாற்றங்களுக்கு உட்படுத்தும் செயற்பாடு உற்பத்தி தொழிற்பாடு ஆகும். அதாவது உள்ளீடுகளை வெளியீடாக்குவதனைக் குறிக்கும்.

பாய்ச்சல் படம் மூலம் அதனை பின்வருமாறு காட்டலாம்.

உள்ளீடு → உற்பத்தி தொழிற்பாடு → வெளியீடு

**உள்ளீடு Input:-** உற்பத்திக்குப் பயன்படுத்தும் மனிதவளம், மூலதனம், கைத்தொழில்நுட்பம் என்பவை உள்ளீடு ஆகும்.

**உற்பத்தி தொழிற்பாடு – Product function:-** உள்ளீடு கலவை மூலமாகவும் முகாமைப் பணி மூலமாகவும் தேவைக்குரியதாக்குதல் செய்தல் உற்பத்தி தொழிற்பாடு எனப்படும்.

**வெளியீடு – out put:-** உற்பத்தித் தொழிற்பாடு மூலமாக நிறைவேற்றப் படுபவை உற்பத்தி எனப்படும். அவை பொருட்களாக அல்லது சேவையாக இருக்கலாம். அல்லது கழிவுகளாக மாசுகளாகவும் இருக்கலாம். இவை வெளியீடு எனப்படும்.

**உற்பத்தியின் துறை ரீதியான வகைப்படுத்தல்**

1. விவசாய உற்பத்தித்துறை அல்லது 1ம் நிலை உற்பத்தி துறை.
2. கைத்தொழில் உற்பத்தித்துறை அல்லது 2ம் நிலை உற்பத்திதுறை.
3. சேவை உற்பத்திதுறை அல்லது 3ம் நிலை உற்பத்தி துறை.

**விவசாய உற்பத்தி துறை / 1ஆம் நிலை உற்பத்திதுறை.**

மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருட்களை இயற்கையில் இருந்து பிரித்தெடுக்கும் தொழில் விவசாயத் தொழில் எனப்படும். ஆதிகால மனிதர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கொண்டிருந்த வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடல், மீன்பிடி என்பன இத்தொழில்துறையில் அடங்கும். ஏனைய இரு துறைகளுக்கும் இவையே அடிப்படை ஆகும்.

**கைத்தொழில் உற்பத்தி துறை / 2ஆம் நிலை உற்பத்தித்துறை**


மனிதனின் அடிப்படைத் தேவைக்கில்லாத 2ஆம் நிலையான பிற தேவைகளுக்குரியவற்றை ஆக்கும் தொழில்கள் 2ஆம் நிலை உற்பத்தித்துறை ஆகும். பெரும்பாலும் பிரித்தெடுக்கும் முதலாம் நிலை உற்பத்தியை உள்ளீடாகக் கொண்டு நடைபெறும் உற்பத்திகள், உருமாற்றுதல், அமைத்தல் அல்லது கோப்புச் செய்தல் என்பனவும் இதில் அடங்கும். சுரங்கம் அகழ்தல் நீர், மின், வாயு வழங்கல் என்பவற்றையும் மத்திய வங்கி கைத்தொழில் துறைக்குள் அடக்கும்.

**சேவை உற்பத்தித் துறை / 3ஆம் நிலை உற்பத்தித்துறை**

களஞ்சியப்படுத்த முடியாத பயன்பாடுகள் சேவை உற்பத்திகள் ஆகும். நுகர்வோர் வழங்குனரிடம் இருந்து பெறவேண்டிய சேவைகளும் நுகர்வோர் தாம் உணராமல் பெற்றுக் கொள்ளும் சேவைகளும் 3ஆம் நிலை உற்பத்தி ஆகும். ஆசிரியர், நடிகர், சங்கீத விற்பன்னர்கள் சேவைகளை, நுகர்வோர் நேரடியாகவும் நாடாக்கள் மூலமும் பெறலாம். அதே வேளை வழக்கறிஞர் சேவையினை நேரடியாகப் பெறலாம். இச் சேவைகளும் போக்குவரத்து, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல், விளம்பரப்படுத்தல், வங்கி, காப்புறுதி ஆகியனவும் சேவை உற்பத்தி துறைகளாகும்.


**உள்ளீடும் வெளியீடும்.**

எந்தவொரு உற்பத்தித் தொழிற்பாட்டினையும் பின்வருமாறு பாய்ச்சல் படமாக காட்டமுடியும்.




உற்பத்திக்கு சில சாதனங்கள் தேவைப்படும். அவை உள்ளீடுகள் எனப்படும். மனிதவளம், மூலதனம், முகாமைத்தொழில் நுட்பம், மூலப்பொருட்கள் என்பன உள்ளீடுகளாகும். உள்ளீடுகளைப் பயன்படுத்தி பொருட்களும் சேவைகளும் ஆக்கப்படுகின்றன. உற்பத்திகளை வழங்குவதற்கான செயற்பாடுகள் பல. கலவை செய்தல், உருமாற்றுதல், கோப்புச் செய்தல் என்பன சில உதாரணங்களாகும்.

உற்பத்தி தொழிற்பாட்டை பின்வருமாறு பாய்ச்சல் படமாக காட்டுவோம்.





**விநியோகம்**

நுகர்வோர் எளிதாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையொன்றை உருவாக்கி அவர்களிடம் சேர்த்தல் விநியோகம் எனப்படும்.

**விநியோக வழிகள்**

உற்பத்தியாளர்களிடம் இருந்து பொருட்கள் நுகர்வோரை சென்றடையும் வழிகளை எடுத்துக் காட்டல் விநியோக வழிகள் எனப்படும்.

விநியோக வழிகளை பாய்ச்சல் வரைபில் காட்டல்




**நேரடி விநியோகம்:-** உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக நுகர்வோரைச் சென்றடையும் பொருட்கள் தொடர்பான விநியோகம் நேரடி விநியோகம் ஆகும்.உதாரணம்:- பாய், மட்பாண்டம், காய்கறிகள்.

**நேரடி விநியோகத்தின் நன்மைகள்**

1. பொருட்களை விபரித்து விற்கலாம்.
2. பழுதடையக் கூடிய பொருட்களை விரைவாக விற்கலாம்
3. சிறந்த பொதிகட்டல், பெயரிடல் செலவுகளைக் குறைக்கலாம்.
4. குறைந்த விலையில் பொருட்களை விற்கலாம்.
5. நுகர்வோர் நம்பிக்கையுடன் கொள்வனவு செய்யலாம்.

(25 ஆம் பக்கம் பார்க்க)

"ஆற்றல்"16வது இதழ் தொடர். . . . . . .

## விபத்துக்காப்புறுதி

விபத்தபாயம் தொடர்பாக சொத்துக்கள் அல்லது ஆயுளுக்கு ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஏற்படுத்திக் கொள்ளுகின்ற காப்புறுதியினையே இது குறித்து நிற்கும். இது இரண்டு வகைப்படும்.

1. பொருள் சார் விபத்தபாயக் காப்புறுதி
2. ஆள் சார் விபத்தபாயக் காப்புறுதி

பொருள் சார்ந்த விபத்தபாயக் காப்புறுதி என்றால் சொத்து உடமைகளுக்கு விபத்தபாயம் தொடர்பாக ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஏற்படுத்திக் கொள்கின்ற காப்புறுதியினையே இது கருதும். இக் காப்புறுதி இழப்பீட்டுத் தத்துவத்திற்கு அமைவானது ஒன்றாகும். அதேபோன்று ஆயுள் சார் விபத்தபாயக் காப்புறுதி என்றால் விபத்தபாயம் காரணமாக ஆயுள் ஒன்றுக்கு ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் எடுக்கப்படும் காப்புறுதி ஆகும். இது இழப்பீட்டுத் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானதொன்றாகும்.

### விபத்தபாய காப்புறுதியின் வகைகள்.

1. மோட்டார் வாகனக் காப்புறுதி

மோட்டார் விபத்துக் காரணமாக உடமையாளருக்கு ஏற்படுகின்ற அனைத்து நட்டங்களுக்கும் நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒரு வகை விபத்தபாயக் காப்புறுதியினையே மோட்டார் வாகனக் காப்புறுதி குறித்து நிற்கும். மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்திற்கமைய மோட்டார் விபத்துக் காரணமாக ஏற்படுகின்ற சகல வகையான நட்டங்களுக்கும் மோட்டார் வாகன உடமையாளரே பொறுப்பாளராகக் கருதப்படுகின்றனர். மோட்டார் விபத்துக் காரணமாக மோட்டார் வாகன உடமையாளருக்கு பின்வரும் 3 நட்டம் ஏற்படும்.

1) வாகனத்திற்கும் சாரதிக்கும் இடையிலான நட்டம்.
2) வாகனத்தில் உள்ள பயணிக்கும் சொத்துடமைக்குமான நட்டம்.
3) வீதி பயணிகளுக்கும் சொத்துடமைகளுக்கான நட்டம்.

மோட்டார் வாகன விபத்தபாயக் காப்புறுதியினை 3 வகையாகப் பாகுபடுத்தலாம்.

(1) அகழ்விரிவான காப்புறுதி அல்லது பல்துறை காப்புறுதி

மோட்டார் வாகன விபத்துக் காரணமாக ஏற்படுகின்ற அனைத்து நட்டங்களுக்கும் நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் மோட்டார் வாகன உடமையாளர்களினால் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒருவகை காப்புறுதியினையே இது கருதும். இதன்படி மோட்டார் விபத்துக் காரணமாக வாகனம் சாரதி, வாகனத்தில் உள்ள பயணி, அவரது சொத்துடமை, வீதிப்பயணி அவரது சொத்துடமை போன்றவற்றுக்கு ஏற்படுகின்ற அனைத்து நட்டங்களுக்கும் இக்காப்புறுதி நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கின்றது. இதனால் இதனை பூரண மோட்டார் வாகனக் காப்புறுதி என அழைக்கப்படும்.

(2) உயர்ந்த பட்ச மோட்டார் வாகனக் காப்புறுதி

மோட்டார் விபத்துக் காரணமாக வாகனத்தில் உள்ள பயணிக்கும் அவரது சொத்துடமைக்கும், வீதி பயணிக்கும் அவரது சொத்துடமைக்கும் ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் மோட்டார் வாகன உடமையாளர்களினால் ஏற்படுத்திக் கொள்ளப்படும் காப்புறதியினையே இது கருதும்.

**(3) மூன்றாம் நபர் காப்புறுதி அல்லது படர்க்கைக் காப்புறுதி.**

மோட்டார் வாகன விபத்துக் காரணமாக வீதிப் பயணிகளுக்கும் அவர்களுடைய சொத்துடமைகளுக்கும் ஏற்படுகின்ற நட்டங்களுக்கு, நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் மோட்டார் வாகன உடமையாளர் களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு வகை காப்புறுதியினையே இது குறிக்கும். வாகன உடமையாளர்கள் இக்காப்புறுதிப் பத்திரத்தினைப் பெறாமல் வாகனத்தினை வீதியில் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மோட்டார் வாகனக் காப்புறுதியில் வீட்சி உள்ளடக்கம் என்றால் வீதிப்பயணிகளுக்கும் அவர்களுடைய சொத்துடமைகளுக்கும் ஏற்படுகின்ற நட்டங்களுக்கான நட்ட ஈட்டினையே குறிக்கும்.

**2. தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி**

வேலைநேரங்களில் தொழிலாளிகளுக்கு ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வேலைகொள்வோனால் மேற்கொள்ளப்படுகின்ற விபத்தபாயக் காப்புறுதியினையே தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி குறித்து நிற்கும். இங்கு வேலை நேரங்களில் விபத்துக் காரணமாக உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக அல்லது உடமை ரீதியாக நட்டம் ஏற்படுகின்ற வேளையில் நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இக்காப்புறுதி மேற்கொள்ளப்படுகின்றது.

**3. தொழிலாளர் நம்பிக்கை காப்புறுதி அல்லது விசுவாசக் காப்புறுதி.**

தோழிலாளர்களின் விசுவாசமற்ற தன்மை காரணமாக தொழில் முயற்சியாளனின் உடமைகளுக்கு வேண்டும் என்றே ஏற்படுத்தப்படுகின்ற அபாயங்கள் அல்லது நட்டங்களுக்கு வேலை கொள்வோனால் மேற் கொள்ளப்படுகின்ற காப்புறுதித் திட்டத்தினையே இது குறித்து நிற்கும். ஒரு வியாபார நிறுவனம் ஒன்றில் காசாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், விற்பனையாளர்கள் போன்றோருக்காக நம்பிக்கைக் காப்புறுதி மேற் கொள்ளப்படுகின்றது. இவர்களினால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் அல்லது ஊழல்களினால் எதிர்நோக்க வேண்டிய நட்டங்களுக்கு இக்காப்புறுதி நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கின்றது.நம்பிக்கைக் காப்புறுதி பின்வரும் நிறுவனங்களில் பெரிதும் மேற்கொள்ளப்படுகின்றது.

1. பரும்படியாக்க நிறுவனங்கள்.
2. வியாபார நிறுவனங்கள்
3. நிதி நிறுவனங்கள்
4. களவுக் காப்புறுதி

வீடு உடைத்தல், கொள்ளை காரணமாக கட்டிடம் ஒன்றில் உள்ள சொத்துகளுக்கு ஏதாவது இழப்புக்கள் ஏற்படுமேயாயின், அவற்றிற்கு நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்ற ஓர் விபத்தபாயக் காப்புறுதியினையே இது குறித்து நிற்கும்.

**தீயபாயக் காப்புறுதி**

தீ அபாயம் காரணமாக சொத்துகளுக்கு ஏற்படுகின்ற நட்டங்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சொத்தின் உடமையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபாயக் காப்புறுதியினையே தீ அபாயக் காப்புறுதி என அழைக்கப்படும். நிறுவனம் ஒன்றில் கட்டிடங்கள், தளபாடங்கள் இயந்திரங்களும் பொறித்தொகுதிகளும் போன்ற நிலையான சொத்துக்களுக்கான தீ அபாயக் காப்புறுதி மேற்கொள்ளப்படுகின்றது. தீ பற்றி எரியும் தன்மை அதிகமாக உள்ள சொத்துகளுக்கு உயர்வான கட்டணங்கள் அறவிடப்படும். அதாவது வெடிமருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை எரிபொருள் நிரப்பும் நிலையம், எரிபொருட்களை விற்பனை செய்யும் பலசரக்குக் கடைகள் போன்ற சொத்துக்களுக்கு தீ அபாயக் காப்புறுதிக்காக உயரந்தளவு கட்டணம் அறவிடப்படும்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

## Stories with Kennard Uncle – 03 ம் பாகம்

Kennard uncle ஓர் வயது முதிர்ந்த, இளைப்பாறிய அரசாங்க அலுவலர். தனித்து வாழும் புத்தகப் புழுவான இவருக்கு சிறு பிள்ளைகளில் மிகவும் பிரியம்.

அயல் Teenagers ஆன Judy, Maxmy, Edith ஆகியோருக்கு இவர் சொல்லும் சுவையான, உண்மைச்சம்பவக் கதைகளே இவை. இலகு ஆங்கிலத்தில் உள்ளன. இருந்தும், சிக்கல் உண்டானால் ஆங்கில ஆசிரியரை நாடலாம்.

இயலாது போனால், இருக்கவே இருக்கின்றது : ஆங்கில - தமிழ் அகராதி / Dictionary. சொற்களின் கருத்தை தேடி எடுத்தால், மனதில் இலகுவாகப் பதியும்.

### The story of how Israelis rescued the hostages at Entebbe Airport in Uganda.

Little late in the after noon . Ken uncle has had his lunch. He is seen seated at his writing table with a half smoked pipe in his grasp. The old man is snoozing, nodding in rhythm. An opened book is on the table, in front of him. His spectacles have slipped to the very tip of his nose. His rhythmic nods with glasses on tip of his nose is a comical scene indeed !

The three mischievous teenagers: Judy, Edith and Maxmy at Ken uncle's door step took in the scene and began giggling ... the leader Judy, swiftly turned to the other two, with a warning sign: right fore on Finger tight lips for silence .

Edith and Maxmy were almost bursting with laughter. Both leaned against each other, shoulders shaking with absolute mirth. But not a note came forth. They slowly subsided in to a soft giggle.

Ken uncle opened his eyes and welcomed them saying, "Walk in my dears" , and queried , "Why so late today?". The three of them remained silent and took their usual seats.

"Alright children ," began ken uncle and announced, "Today we shall talk of the Great Don Bradman who passed away this year" .

"Great in what Ken uncle?", asked the impatient Maxmy.

"Why Maxmy dear, he is the greatest Batsman the game of cricket ever produced", replied Ken uncle in a reprimanding manner at her ignorance.

"Cricket , Cricket, Cricket .... the whole time Cricket ... " , burst out Maxmy the vivacious.

"Yes uncle", chipped in the peace lover Edith , "Please tell us some thrilling story ... Cricket is rather boring", she conclued.

Ken uncle studied them for a while . Thougt a little and made up his mind , and declared, "Ok dears, today I' ll tell you about a daring event . I read of this in both 'NEWS WEEK' and 'READER' s DIGEST'.

"What 's it uncle ?", asked the impatient Maxmy.

Before anyone could react, Edith pinched Maxmy on her shoulder and said, "Curiosity killed the cat", in a motherly tone, "So why not listen and learn," she chided with deep sarcasm.

"Uhmm ... now, no more interruptions please"; Judy the leader laid down a single, yet simple rule.

"Alright dears", began Ken uncle, "An Air France plane was on a flight from Tel – Aviv, the capital city of Israel, to Paris. The ' Airbus' plane carried 242 passengers and 12 crew members.

"On 23rd June 1976, the plane lifted off from Athens Airport on a its last leg of the flight. Suddenly two young Arab passengers, a man and a woman, jumped up from their seats, with pistols and hand greandes in their hands. They ordered the passengers and crew into silent submission.

"The plane was first ordered to Benghazi of Libiya. Colonel Mohamed Gaddafi ruled Libiya as a dictator and he encouraged terrorist activities. There the plane refueled and was ordered to proceed to Entebbe Airport in Uganda where General Idi Amin was the dictator ruler in that country.

"Some 2000 miles away from the hapless hostages and captured plane, the Israel prime Minister Yitzhak Rabin met with his Ministers in the cabinet room. They decided not to give into any demands the terr0ists may make. But for the moment they would pretend to prepare for negotiations.

"The Israel government sought information from various sources. The construction company that built Entebbe Airport; information on flight routes; communication and refueling facilities in nearby Nairobi Airport of Kenya; ariel photographs of Entebbe Airport taken by over passing satellites of USA were a few of the information.

" In the meantime the hijackers released at Entebbe all the non – Jews. Thus the hostages were reduced from 254 to 106. And more information were collected from the released passengers when they flew in to their own home Airports.

"Then on the 11th day, 03 july, a strike force lifted off from Israel. The name of the operation was : operation Thunderball.

"Four huge us built Hercules C – 130 cargo planes and two Boeing 707 Jets took off on the rescue mission. One of the Boeing 707 was the ' command and communications center, and the other was a 'Hospital plane'.

"The convey of six planes were escorted by Isralei phantom Jets, for most part of the way, along the normal Israel Airlines' usual route to South Africa.

(28 ஆம் பக்கம் பார்க்க)

# ENGLISH LESSON 01
# FUNCTIONAL GRAMMER

ஆங்கிலம் சரளமாக பேச 30 நாட்களில் கற்றுத் தருவோம், (SPOKEN ENGLISH), என்பது இயலாத காரியம். பேசுவதற்கு நீங்களே முயல வேண்டும், பேச வேண்டும், அப்போது தான் பரீட்சயம் ஆகும்.

ஆனால், ஆங்கிலத்தை ஓரளவு பிழைகள் இல்லாது எழுத கற்றுத் தர முடியும். FORMAL GRAMMER அறிவு இல்லாது, பலர் சிறு கதைகள், கட்டுரைகள் புனைந்துள்ளனர். அவை பிரசுரிக்கப்பட்டு, வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளன. எமக்கு FORMAL GRAMMAR தேவை இல்லை FUNCTIONAL GRAMMAR மட்டுமே போதும்.

முதலில் ஓர் தரமான DICTIONARY ஒன்றினை பெற்றுக் கொள்ளுங்கள். நான் விரும்புவது POCKET OXFORD DICTIONARY, 'சொற்கள்' எண்ணங்களை விபரித்து வெளிப்படுத்தும் "ஆயுதங்கள்", அடிப்படையான "மூலக்கருவிகள்". கூடிய சொற்கள் தெரிந்தவரது எண்ணங்கள் தெளிவாகவும், திடமாகவும் பிரதிபலிக்கும்.

ENGLISH ல் தெரிய வேண்டியவை ஏராளமாக உள்ளன. ஆனால் நாம் ஒட்டு மொத்தமாக ஓர் 15 விஷயங்கள் தெரிந்தால் போதுமானது. நாம் பரிமாற இருக்கும் 15 விஷயங்களாவன:

1. First Person
2. Second Person
3. Third Person
4. NOUN – பெயர்ச்சொல்
4. PRONOUN – பிரதிப் பெயர்ச்சொல்
5. ADJECTIVE – பெயர் உரிச் சொல்
6. VERB – வினைச்சொல்
7. ADVERB – வினை உரிச் சொல்
9. SINGULAR – ஒருமை
10. PLURAL – பன்மை
11. MASCULINE – ஆண்பால்
12. MENINE – பெண்பால்
13. PAST TENSE - இறந்தகாலம்
14. PRESENTTENSE– நிகழ்காலம்
15. FUTURE TENSE – எதிர்காலம்

ENGLISH எழுதும் போது நீங்கள் கவனிக்க வேண்டிய இரு, முக்கியமான, பொது விதிகள் உள்ளன:

முதலாவது, Dot your " i" s and cross your 't' s. அதாவது, நீங்கள் எழுதிய 'i' என்னும் எழுத்துகளுக்கு, தவறாது, 'குற்று' போட வேண்டும்: அத்துடன், 't' எழுத்துக்களது 'cross' (குறுக்கு கோடு) களை, மறவாது, இட வேண்டும்.

இரண்டாவது, Punctuation: அதாவது, Full Stop, Comma, போன்ற குறியீடுகள், தப்பாது, பாவிக்க வேண்டும். ஓர் சின்னஞ் சிறிய comma இடம் மாறியதால், ஒருவரின் உயிரே பறிபோகக் கூடிய கருத்து மாற்றம் உருவாகியது. இந்த வசனங்களை கவனியுங்கள்:

'Kill him not, let him free'.
'Kill him, not let him free'.

உங்கள் சகலருக்கும் ஏராளமான English Words தெரியும். இவைகளை ஒழுங்காக கோற்று, சீராக வெளியிட உதவுவதே எமது நோக்கம். ஒழுங்காக எழுதப் பழகாது போனால் கீழ்க் கண்டவாறு, சிரிப்புக்கிடமான, வசனங்களை எழுதி அவமானப்படுவீர்கள்.

இவ் வசனங்கள் இரு வகையானவை. முதலாவது பந்தியில் உள்ளவை நகரசபைக்கு எழுதப்பட்டவை.

01. I am forwarding my marriage certificate and my children.
I had seven, but one died which was baptized on a half sheet of paper
02. I an writing to say that my baby was born two years old. When do I get my money?
03. I am glad to report that my husband who was reported missing is now dead.
04. Please find for certain if my husband is dead. A man I live with now can't eat or do anything till he knows.
05. I am very much annoyed to find that you have branded my baby as illiterate as this is a dirty lie. I was married to his father a week before he was born.
06. Unless I get my husband's money pretty soon I will have to lead an immortal life.
07. In accordance with instructions, I have given birth to twins in the enclosed envelope.
08. I want money as quick as I can get it. I have been in bed with the Doctorfor two week and he doesn't do me no good.

கீழே உள்ளவை Insurance (காப்புறுதி) விண்ணப்பங்களில் சாரதிகளினால் எழுதப்பட்டவை.

01. Coming home, I drove into the wrong house and collided with a tree. I don't have.
02. The other car collided with mine without giving warning of its intentions.
03. I collided with a stationery truck coming the other way.
04. I had been driving for 40 years when I fell asleep at the wheel and had an accident.
05. A pedestrian in hit me and went under my car.
06. My car legally parked as it backed into the other vehicle.
07. I told the police that I was not injured, but on removing my hat, I found that I had fractured skull.
08. The indirect cause of an accident was little guy in small car with big mouth.

ஆங்கிலம் ஓர் ILLOGICAL LANGUAGE (முரண்பாடான, தர்க்க சாஸ்திரத்திற்கு புறம்பான) என வர்ணிக்கப்படுகின்றது. பல சொற்கள் ஒரேவிதமான (SPELLING) எழுத்துக்கூட்டலையும், உச்சரிப்பையும் கொண்டிருக்கும். ஆனால், வசனத்திற்கேற்ப, கருத்து மாறுபடும்.

உதாரணமாக: Read (ரீட்) என்பது, "வாசிப்பதை" நிகழ் அல்லது எதிர்காலத்தில் கூறும். Read (றெட்) என்பது, வாசித்ததை இறந்த காலத்தில் கூறும். மேலும், சில சொற்கள் ஒரே மாதிரியான உச்சரிப்புள்ளவை, ஆனால் கருத்து மாறுபடும். உதாரணம்: Read (றெட்) என்பது, இறந்தகால "வாசித்தது". Red (றெட்) சிகப்பு நிறம். ஒரே உச்சரிப்பு. Bean (பீன்) என்பது அவரை காய் அல்லது விதை. Been (பீன்) என்பது HAS BEEN, HAVE BEEN என்னும் வசன பகுதி. ஒரே உச்சரிப்பு. இவ்வாறு பல உள்ளன.

ஆங்கிலத்தில் உள்ள 26 எழுத்துகளைக் கொண்டே 600,000 அதிகமான சொற்களை உருவாக்க வேண்டியதால் இந்தக் குளறுபடி நிலை உருவாகியது. இவைகளை எமது பாடங்கள் மூலம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## Global Warming Green House Effect
### பூமியின் வெப்பம் பச்சை வீட்டுத்தாக்கம்

மானிட செயற்பாட்டால் பூமியின் சூழலில் Carbon Dioxide ($Co_2$), Methne போன்ற வாயுக்கள் சேர்கின்றன. சூரியனது வெப்பம் பூமியை அடைந்து, மீண்டும் தெறித்து வளிமண்டலத்தைச் சென்றடைய விடாது இவ் வாயுக்கள் தடையாக உள்ளன. இதனால் பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றது. பத்து வருடங்கள் முன்னர் இப் "பச்சைவீட்டுத்தாக்கம்" என்பது ஓர் விஞ்ஞானக் கோட்பாடாகவே இருந்தது.

"இயந்திரத்தொழிற் புரட்சி" (Industrial Revalution) உலகில் 18ம் நூற்றாண்டு தொடங்கியது. அன்று தொடக்கம், இன்று வரை, தொழிற் சாலைகளும், சக்தி உற்பத்தி சாலைகளும், மோட்டார்ரதங்களும், CFC வாயுக்களை உபயோகிக்கும் சாதனங்களும் பூமியின் வளிமண்டலத்தில் வெப்பத் தடுப்பை ஏற்படுத்தும் நிலையை உருவாக்குகின்றன.

அணு ஆயுத போரினால் அல்லது பூமி சிறு கிரகத்துடன் மோதினால் ஏற்படும் அழிவைத்தவிர, பூமியை மிக மோசமாக தாக்கும் சக்தி இப் பச்சை வீட்டுத் தாக்கத்துக்கே உரியது . "சிறு கிரகம்" ( Asteriod) ஒன்று 18ம் நூற்றாண்டில் ரஷ்யா வினது சைபீரிய நிலப்பரப்பில் வீழ்ந்து மோதி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இன்னொன்று மெக்ஸிகோ (Mexico) நாட்டில் சேதம் விளைவித்தது.

ஆபிரிக்கா (Africa) கண்டத்தின் அதி உயர் மலையான Kilimanjaro (கிலிமன்ஜாறோ) தனது உச்சியின் வெண்மையான உறை - பனியின்75% வீதத்தை 1912 ம் ஆண்டு தொடக்கம் இழந்துள்ளது. அடுத்த 15 ஆண்டுகளில் இதனது உறை - பனி முழுமையாக அற்றுப்போகும்.

அமெரிக்கா வினது Montana (மொன்ரானா) மாநிலத்தினது மலை உச்சிகளின் உறை - பனி 70 வருடங்களில் முற்றாக அழியக்கூடும், தற்போதைய சூழல் மாசுபடும் நிலை தொடர்ந்தால். தென் அமெரிக்கா கண்டத்தின் Venezula (வெனஸுலா) நாட்டின் மலை உச்சிகளில் 06 Glaciers (மெதுவாக நகரும் மிகப்பெரிய பனி மண்டலம், பனி மண்டல ஆறு) 1972 ம் ஆண்டளவில் இருந்தன. ஆனால் இன்று இரண்டே இரண்டு பனி மண்டலங்களே உள்ளன.

ஐக்கிய நாடு ஸ்த்தாபனம் Intergovernmental Panel On Climate Change (IPCC) என்னும் சீதோஷண நிலையின் மாற்றத்தை அவதானிக்கும் குழுவை உருவாக்கியது. இந்த IPPC குழுவினது அறிக்கையின் படி மிருகங்களினதும் தாவரங்களினதும் சுமார் 420 பௌதீக செயல் ஒழுங்குகள் தாக்கமடைந்துள்ளன, பூமியின் வெப்பம் கூடியதால். பூமி பனிக்கட்டியினால் மூடப்பட்ட கால வெப்பநிலை $5^0$C கூடியதும், பூமியின் "பனிக்கட்டி காலம்" (Ice Age) உருகி அழியத் தொடங்கியது.

தற்போதைய பூமியின் வெட்பம் அதிகரிக்கும் விகிதம் தொடர்ந்தால் 2100ம் ஆண்டளவில், அதாவது இந்த 21 ம் நூற்றாண்டு முடியுமளவில், (நீங்களும் நானும் இவ்வுலகில் இருக்கமாட்டோம் தான்!), உலகின் வெட்பம் $1.4^0$ C க்கும் $5.8^0$ C க்கும் இடைக்கணக்கில் அதிகரிக்கும். இவ் வெட்ப அதிகரிப்பினால், Artic (ஆர்ரிக்) Antartica (அன்ராரிக்கா) துருவங்களினது பனிக்கட்டி நிலப்பரப்பு உருகத் தொடங்கி கடல் நீர் மட்டம் 09 மீற்றர் உயரும். கடல் நீர் மட்டம் 01 மீற்றர் உயர்ந்தாலே அமெரிக்கா வினது Florida (F ளொறிடா) Louisina (லூய்ஸியானா) மாநிலங்களும்; EGYPT (எகிப்து) நாட்டினது Nile Delta (நைல்நதி முகத்துவார நிலப்பரப்பு); Maldives (மாலை தீவுகள்) Bangladesh

(பங்களாதேசம்) ஆகியவை கடல் நீரில் மூழ்கி சரித்திரப்பெயர்களாக மாறிவிடும். 09 மீற்றர் உயர்ந்தால் ... கற்பனை பயங்கரமாக உள்ளதே!

ஐ. நா வினது IPCC அறிக்கையினது சிபார்சுகளை நடைமுறைப்படுத்த 83 நாடுகள் 09 வருடங்களாக பேச்சு வார்த்தைகள் நடாத்தி, இறுதியில், யப்பான் நாட்டினது Kyoto (க்யோரோ) நகரில் 1997 ம் ஆண்டு Koyoto Agreement (க்யோரோ ஒப்பந்தம்)கைச்சாத்திடப்படப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் படி அபிவிருத்தி அடைந்த நாடுகள், தமது 1990 ம் ஆண்டுகளில் வளிமண்டலத்தினுள் செலுத்திய வாயுக்களின் தொகையிலிருந்து 5% வீதம் குறைப்பதென்றும், அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு சற்று கால அவகாசம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், உலகத்தினது சனத்தொகையில் 4% வீதத்தைக் கொண்ட நாடான ஐக்கிய அமெரிக்கா, 25% வீத பச்சை வீட்டு தாக்கம் உருவாக்கும் வாயுக்களை வளிமண்டலத்திற்கு செலுத்துவதனால், ஐக்கியஅமெரிக்கா தனது 1990 ம் ஆண்டு அளிவில் இருந்து 7% வீதம் குறைக்க வேண்டும் என்றது அவ் ஒப்பந்தம். மற்றவைக்கு 5% , எனக்கு மட்டும் 7% வீதமோ என Bush அரசாங்கம் கோபமுற்றது ஞாயமா என அவதானிகள் கேட்டுள்ளனர்!

சீனா வையும், இந்தியா வையும் அபிவிருத்தி அடையா நாடுகளாக கணித்து அவகாசம் வழங்கியது Bush அரசாங்கத்தை மேலும் சீண்டியிருக்கும்.

சென்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்காக George Bush னது Ripublican கட்சிக்கு ஏராளமான பணத்தை நிலக் கரி கொம்பனிகளும், எரிபொருள் (எண்ணை) கொம்பனிகளும், வாரி வளங்கின. இவ் நிறவனங்களின் மசகுப்பொருட்களினது பாவனையை குறைத்து, அக் கொம்பனிகளின் லாபத்தைக்குறைத்தால், சும்மா விடுவார்களா,.. என்ன?!

நூறு வருடங்களின் பின்னர் வரக்கூடிய அனர்த்தங்களை முன்னிட்டு, இன்றைய சூழல் மாசுபடும் விகிதத்தைக் குறைக்க எத்தனித்து, அதனால் ஏற்படும் பொருளாதார தாக்கத்தால் பாதிக்கப்படும் மக்கள் அடுத்த தேர்தலில், "எம்மை எமது வீடுகளுக்கு அனுப்பிவிடுவார்கள்" என்ற அச்சம் அமெரிக்கா வினது செனற்சபையிலும், காங்கிறஸ் சபையிலும், **Bush** அரசாங்க அங்கத்தவர்களிடமும் பரவலாக உள்ளது.

இதனால், Bill Clinton கைச்சாத்திட்ட Kyoto ஒப்பந்தத்தையும், சென்ற வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் தான் கொடுத்த வாக்குறுதிகளையும் தள்ளி வைக்கப்போறதாக President George Bush அறிவித்துள்ளார். இவரது சூழல் சம்மந்தமான நடவடிக்கைகளை இன்னுமோர் கட்டுரையில் பார்ப்போம்.

| |
|---|
| Time சஞ்சிகையினது பிரத்தியேக அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது. |
| ஆதாரம் : - Time, April 9, 2001. |

"ஆற்றல்" சஞ்சிகையில் ஏற்கனவே வெளிவந்த சம்மந்தப்பட்ட கட்டுரைகள் :

1). சூழலும் சூழல் மாசுபடலும் - இதழ் 07, Sept 1999 , துஸ்யந்தி குமாரவேல், B. SC. Zoology, தேர்தல் காரியாலயம், கச்சேரி, யாழ்ப்பாணம்.

2). சூழற் சீர்கேடுகளிற் காட்டிப்பு - இதழ் 08, Oct1999, கலைச்செல்வி, புவியியல்பகுதி, பல்கலைக்கழகம், கொழும்பு.

3). பச்சை வீட்டுத்தாக்கம் - இதழ்கள் 08 Oct 1999, 09 Nov/ Dec 1999, 11 Feb 2000, 12 March 2000, 13 April 2000

ஆக்கம் : சந்திரலீலா குலசேகரம் பிரதேச செயலகம்
யாழ்ப்பாணம்.

## ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி George W. Bush னது தொடக்க 09 மாத செயற்பாடுகள்

(1) குடிக்கும் நீரில் உள்ள Arsenic (ஆர்சனிக் ரசாயன மூலக நஞ்சு அமிலம்) அளவுகளது விகிதாசாரத்தை குறைக்க வேண்டும் என்ற சட்டத்தை நிராகரித்துள்ளார்.

(2) தேர்தல் காலத்தில் கூறிய வாக்குறுதிகளில் ஒன்று : மின் சக்தி உற்பத்தி ஆலைகளில் இருந்து வெளிப்படும் $Co_2$ வாயுவை குறைப்பது. இதையும் தற்போது நிராகரித்துவிட்டார்.

(3) பூமியின் வெட்ப அதிகரிப்பைக் குறைக்கும் உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கி விட்டார். (Kyoto Treaty)

(4) அழியும் அபாயத்தில் உள்ள இன வகைகளை "பாதுகாக்கப்படவேண்டியவை" எனப் பிரகடனப்படுத்தும் நீதி மன்ற வழக்குகளை பதிவு செய்வதை தடைசெய்துள்ளார்.

(5) நிலச்சுரங்கங்களிலிருந்து கசியும் நச்சு இரசாயன பொருட்களையும், நச்சு நீரையும் கட்டுப்படுத்தும் சட்டத்தை இடை நிறுத்தம் செய்துள்ளார்.

(6) சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஏஜென்சி (Environmental Protection Agency) யினது வருடாந்த பங்கீட்டு நிதியில் இருந்து 6.4 வீத பணத்தைக் குறைப்பது என தீர்மானித்துள்ளார்.

(7) "White House Council "On Environmental Quality" (வெள்ளை மாளிகை சுற்றாடல் ஆலோசனை சபை ) என்னும் அமைப்பை கலைத்து விட்டார். இவரது தந்தை Geroge W. Bush Sr அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் : பூமியின் வெட்ப அதிகரிப்பை உடனேயே குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதனைச் செயற்படுத்துவதை "White House Effect" என பிரகடனம் செய்தவர்.

(8) 15 ஆவது ஆற்றல் இதழது "சர்வதேச செய்திகள்" பகுதியில் (48ம் பக்கம் 6 வது விஷயம்) அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நீதிமன்ற வழக்குகள் விபரிக்கப்பட்டுள்ளன.

Bush அவ் வழக்குகளுக்காக 08 மில்லியன் டொலர்கள் செலவழித்துள்ளார். ஆனால் அவற்றை April 23, 2001 வரைக்கும், அவரது வழக்குரைஞர்களுக்கு கொடுக்கப்படவில்லை . Greenberg Traurig என்னும் வளக்குரைஞர் நிறுவனம் Barry Richards என்னும் சட்டத்தரணியின் தலைமையில் 52 சட்டத்தரணிகளை அனுப்பியது. இந் நிறுவனத்திற்கு மட்டும் 800, 000 டொலர் கொடுபட உள்ளது.

பத்துக்கும் அதிகமான சட்டத்துறை நிறவனங்கள் மேற்கூறியபடி பற்பல வழக்குகளில் ஈடுபட்டிருந்தன. இவைகளின் கணக்குகளும் இன்னமும் தொங்குபடிதான்!

Florida மாநிலத்தில் (George உடைய மூத்த சகோதரர் Jeff அங்கு Governor – ஆளுனர் ஆக இருந்தார்) வழக்குகள் தொடங்கியதும், "Bush Recount Committee (புஷ் வாக்குகள் மீள எண்ணும் செயற்குழு) என்னும் அமைப்பை உருவாக்கினர்.

இக் குழுவினது கடமை நிதி சேர்ப்பதே ! இதனது தலைவர் Texas மாநிலத்தின் (Georuge Bush முன்னைய ஆளுனர்) பல எண்ணைக்கிணறுகளுக்கு உரிமையாளரான Don Evans என்பவரே. இவர் தற்போது Commerce Secretary (பொருளாதார செயலாளர்) ஆக பதவி வகிக்கின்றார்.

(5 ஆம் பக்க தொடர்) **இன்றைய உலகம்**

(7) **China** – உலகின் பயங்கரவாதத்தை ஒழிக்க America விற்கு சகலவிதத்திலும் உதவுவது என தீர்மானித்துள்ளது. இவ் எண்ணம் தனது வடமேற்கில் உள்ள மாகாணங்களில் இருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளின் செயல்களால் உதித்திருக்கலாம்.

சீனாவினது World Trade Organization ல் சேரும் விண்ணப்பம், 15 வருடங்களின் பின்னர், இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளது.

(8) உலக பயங்கரவாதம் : இதனை அழிக்க அமெரிக்க செனற்சபை ஏகமனதாக முன்னர் அனுமதித்த 20 Billion டொலர் தொகையை, இப்போது 40 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

40 பில்லியன் என்றால், 40,000,000,000/= ஆகும்.

(9) **Washington D.C.** – அமெரிக்க தலை நகரில் சகல மத தலைவர்களும் இணைந்து நடாத்திய "தேசிய துக்க தின" வைபவத்தை, வட அமெரிக்க இஸ்லாமிய மதத் தலைவரே பிரதான போதகராக, முதற் பேச்சாளராக, தொடக்கி வைத்தார்.

(10) **Afghansistan** : அமெரிக்காவினது தாக்குதலை எதிர்பார்க்கும் மக்கள் Kabul தலைநகரில் இருந்து கிராமப் புறங்களுக்கும், Pakistan எல்லைப் பகுதிக்கும் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர்.

இதனிடையில், Pakistan, Iran ஆகிய இரு நாடுகளும் தமது எல்லைப் பகுதிகளில் துருப்புகளை குவித்து, ஆப்கனிஸ்தான் ல் இருந்து அகதிகள் வருவதை தடுக்க ஆயத்தமாகியுள்ளன.

(11) வட ஆப்கனிஸ்தான் - வட ஆப்கனிஸ்தானில் தலிபான் இயக்கம் இன்னமும் செல்வாக்கு பெறவில்லை. இங்கு பெண்கள் பாடசாலை செல்கின்றார்கள், தொழில் புரிகின்றனர், சுதந்திரமாக வாழ்கின்றனர்.

இப் பகுதியில் வெகுபிரபல்யமான தளபதி அகமட் செய்து மசூட் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டார். 1980 களில் ஆப்கனிஸ்தானது கொம்யூனிஸ அரசாங்கத்திற்கு ஆதரவாக ரஷ்ய ராணுவம் சென்றது. வடக்கில் தளபதி மசூட் ரஷ்ய ராணுவத்தை தனது பகுதியான பஞ்சா பள்ளத்தாக்கை, 10 வருடங்களாக, கடைசி வரை ஆக்கிரமிக்க விடாது போராடினார்.

பேட்டி காணும் பத்திரிகையாளர்கள் போல தோன்றிய இரு அரேபியர்களால் தளபதி மசூட் கொல்லப்பட்டார். இவ் இருவரும் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவரது இறுதிச் சடங்கில் கைகளில் இவரது படங்களை ஏந்திய பல்லாயிர மக்கள் கண்ணீருடன் பங்குபற்றினர்.

(12) **Philipines** – சென்ற வருடம் Abu Sayaff என்னும் பயங்கரவாத இய்க்கம் பணயக் கைதிகளாக 20 உல்லாச பயணிகளைப் பிடித்தனர்.

இராணுவம் இவர்களை பிடிக்கவென சுற்றி வளைத்தது. பிடிபடுவது திண்ணம் என்ற நிலையில், சடுதியாக சுற்றி வளைப்பில் இருந்து எதிர்பாராத விதமாக விடுபட்டு தப்பிவிட்டனர்.

இலஞ்சம் பெற்ற உயர் இராணுவ அதிகாரிகளது சதியே இது என சிலர் கைதாகி விசாரணை நடைபெறுகின்றது.

(13) அகதிகளை கடத்தும் வியாபாரம்:

BBC நிருபர் Ms. Frances Harrison நீர்கொழும்பில் இருந்து அறிவித்தது: மீன்பிடிக்கும் வள்ளங்களில் satellite மூலம் திசை காணும் சாதனங்களும், நீண்ட தொலைத் தொடர்பு சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

இவைகளில் தலா 4,000 டொலர்கள் கொடுத்து அகதிகளாக ஒஸ்றேலியா செல்கின்றனர். பிடிபட்டால் நாடு கடத்தப்படுவர். பண வசதி உண்டானால் மீண்டுமொரு தடவை எத்தனிப்பர்.

அதிசயம் என்னவென்றால், சிறுபான்மை தமிழரல்ல இவ்வாறு செல்வது, பெரும்பான்மை இன சிங்கள மக்களே பணம் கொடுத்து கள்ளமாக கடத்தப்படுகின்றனர்.

(World Today ல் 11.09.2001 அன்று கேட்டது).

(14) **Zimbabwe** – தலைநகரான Harare யில் Malawi, Angola, Namibia, South Africa, Zambia நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி Dr.Robert Mugabe யுடன் உரையாடினர்.

வெள்ளை இனத்தவரது நிலங்களை பலோத்காரமாக கறுப்பினர்களுக்கு கொடுக்கும் முகாபே யினது கொள்கை தென் ஆபிரிக்க பிராந்தியத்திற்கு பெரும் பொருளாதார, அரசியல் ஆபத்தை விளைவிக்கும் என அறிவுறுத்தினர்.

இக் கலந்துரையாடல் நடந்த வேளை, இரண்டாவது பெரிய நகரான Bulawayo வினது மாநகர சபை தேர்தலில் முகாபே யினது எதிர் கட்சியான Movement For Democratic Change (MDC) தாம் போட்டியிட்ட சகல தொகுதிகளிலும் வென்றது.

தேர்தல் பிரச்சார காலத்தில் MDC வேட்பாளர்கள் பலர், பற்பல குற்றச் சாட்டுகளில் கைதானார்கள். தற்போது மாநகர சபை மேயராக வென்றுள்ளவர் இன்னமும் விடுதலையாகாதுள்ளார்.

(BBC world today – 11-09-2001)

(15) **Israel** – பலஸ்தீனியர்களின் தற்கொலை குண்டுதாரிகளால் யூத மக்களும், இராணுவத்தின் எதிர் தாக்குதலில் பலஸ்தீனரும் தினமும் அழிகின்றனர்.

பிரதமர் Ariel Sharon 48 மணித்தியால அமைதி Yasir Araffat ரினால் உத்தரவிடப்படுமாயின் மட்டுமே தனது வெளிநாட்டு விவகார அமைச்சர் **Simon** Peres பேச்சுவார்த்தைக்கு Araffat ரது அழைப்பை ஏற்றுக் கொள்வார் என அறிவித்துள்ளார்.

அரபாத் தினது அதிகாரம் அவர் பக்கத்தில் ஒரு போர் நிறுத்தத்தை உருவாக்க பற்றாதென அவதானிகள் கூறுகின்றனர்.

(16) **Japan** – MCD அல்லது BSE என்றும் மிருக வருத்தம் முதல் முறையாக இங்கு தோன்றியுள்ளது. இதுவே ஆசியாவினது முதல் கேஸ். இந்நோய் கோமாரி எனும் Foot and Mouth disease அல்ல.

Britain ல் தோன்றி, ஐரோப்பா நாடுகளுக்கும், தென் அமெரிக்க நாடுகளான Argentina, Uruguay, Brazil நாடுகளுக்கும் பரவி கோடிக்கணக்கில் மாடுகளை கொன்றழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவ் வியாதியால் ஏற்பட்டது. ஒரு நாட்டின் பொருளாதார நிலையை உருக்குலைக்கும் வியாதியென்பதால் யப்பான் நாட்டினது நிலை கவலைக்கிடமானது.

மிருக உணவை இறக்குமதி செய்வதாலேயே இந்நோய் பரவுகின்றது.

(17) **Nepal** – Babu Chiri Sherpa, 35 வயது, இமயமலை சிகரத்தை 11வது தடவையாக ஏற முயன்றபோது 6,500 மீற்றர் ஏறிய பொழுது சறுக்கி விழுந்ததால் மரணித்தார்.

இவர் சென்ற வருடம் 16 மணி 56 நிமிடங்களில் சிகரத்தை "ஏறி - இறங்கி" சாதனை படைத்தார். அத்துடன், 21 மணித்தியாலங்களாக சுவாசிக்கும் விசேட சாதனங்கள் இல்லாது சிகரத்தில் நின்று 1999ஆம் ஆண்டு சாதனை உருவாக்கினார். சுமார் 05 மைல்கள் உயரமான சிகரத்தில் சுவாசிப்பதற்கு பிராணவாயு மிகவும் குறைவாகவே உள்ளது.

(Time – May 14, 2001)

(18) **Ghana** – தலைநகர் Accra வினது உதை பந்தாட்ட அரங்கில் ஒரு போட்டியின் போது, பார்வையாளர் மத்தியில், இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது. இதனைத் தடுக்க பொலீஸார் கண்ணீர் புகை பிரயோகித்தனர்.

இதன் விளைவாக ஏற்பட்ட நெரிசலில் 126 மக்கள் தப்பியோட வழியில்லாது நெரிந்து மாண்டனர்.

பொலிஸார்து விவேகமற்ற செயலே காரணம் என பலர் அறிவித்தனர்.

(Time – May 21, 2001).

(19) **International War Crime Tribunal – Hauge**

நகரில் முன்னாள் சேர்பிய நாட்டு இராணுவ அதிகாரியான Dragan Obrenovic, 38 வயது, 7,500 Bosnia முஸ்லீம்களை கொன்ற குற்றத்திற்கு, தான் சுற்றவாளி என பதிலளித்தார்.

1995ல் Srebrenica நகரில் நடந்த படுகொலைகளை நடாத்த தனது உயரதிகாரியான General Radislan Kristic தான் உத்தரவிட்டார் என்கின்றார் இக் கொலைஞர்.

(Time/April30, 2001)

சர்வதேச "வானொலி", "சஞ்சிகை" ஊடகங்களில் இருந்து தொகுக்கப்பட்டவை.

**கரன் பிரின்ரேஸ்**

*உங்களுக்கு அளிக்கும் சலுகைகள்.*

- போட்டோ பிரதி சேவை ( ஏ4 இரண்டு பக்கம் 3/=)
- அடையாள அட்டை கவரிடல் 18/=
- ஆய்வுக்கட்டுரைகள் பக்கம் ஒன்று 25/=

மற்றும் பாடசலை உபகரணங்கள்.

303,303A, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

(7 ஆம் பக்க தொடர்) **முகாமைக் கணக்கீடு**

**5:3 உழைப்பு விளைவு விகிதம் - Earning Yield Ratio**

சாதாரண பங்கொன்றுக்கான உழைப்புக்கும் சாதாரண பங்கின் சந்தைவிலைக்கும் இடையிலான தொடர்பினை நூற்று வீதத்தில் மதிப்பிடுவதன் மூலம் இது கணிப்பிட முடியும்.

$$\text{உழைப்பு விளைவு விகிதம்} = \frac{\text{சாதாரண பங்கொன்றுக்கான உழைப்பு}}{\text{சாதாரண பங்கின் சந்தை விலை}} \times 100$$

**5:4 பங்கொன்றுக்கான பங்கிலாபம் - Dividend per share**

சாதாரண பங்குதாரருக்குரிய பங்குலாபத்தினை சாதாரண பங்குகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் இது பெறப்படும்.

$$\text{பங்கொன்றிற்கான பங்கிலாபம்} = \frac{\text{சாதாரண பங்கிலாபம்}}{\text{சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$$

**5:5 பங்கிலாப விளைவு விகிதம் - Dividend Yield Ratio**

சாதாரண பங்கொன்றுக்கான பங்குலாபத்திற்கும் சாதாரண பங்கின் சந்தை விலைக்கும் இடையிலான தொடர்பினை நூற்று வீதத்தில் மதிப்பிடுவதன் மூலம் இது கணிப்பிடப்படும்.

$$\text{பங்கிலாப விளைவு விகிதம்} = \frac{\text{சாதாரணபங்கொன்றுக்கான பங்கிலாபம்}}{\text{சாதாரண பங்கொன்றின் சந்தை விலை.}} \times 100$$

18ஆவது ஆற்றல் இதழில் சாதாரண பங்கொன்றுக்கான தேறிய புத்தகப் பெறுமதியில் இருந்து கடந்தகால வினாவிடைகள் வரை இக் கட்டுரை தொடரும்.

---

(20 ஆம் பக்க தொடர்) ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி

இவர் துரிதமாக 8.3 மில்லியன் டொலர்கள் சேகரித்தாராம். ஆனால் எதிர் கட்சியில் Al Gore றது குழு 3.9 மில்லியனே சேகரித்ததாம்!

ஆனால் இச் சட்டநிபுணர் நிறுவனங்கள் தங்களுக்கு ஜனாதிபதியின் கட்சியில் இருந்து வரவேண்டிய பணத்தையிட்டு கவலை கொள்வதும் இல்லை, நெருக்கடி கொடுப்பதும் இல்லை.

தற்போது Greenberg Trauring சட்ட நிறுவனம் மின் சக்தி உற்பத்தி கொம்பனிகளையும், மருந்து வகை தயாரிக்கும் கொம்பனிகளையும், Internet ல் சூதாட்டம் நடாத்தும் நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

அரசாங்கத்தினது செயற்திட்டங்களையும், கொள்கைகளையும் நிர்ணயிப்போரை அணுகுவதற்கு நிறுவனங்கள் பெருந் தொகையான பணத்தை அள்ளி வீச ஆயத்தமாக உள்ளன.

ஆகவே, 800, 000 டொலர்களை Barry Richards பெறாவிட்டாலும், அது ஓர் சாமர்த்தியமான முதலீடாகவே கருதப்படும்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஊழலில் எவ்வகையானது என வினாவுகின்றனர் அவதானிகள்!

Michael Isikoff: Newsweek ல் April 23, 2001 எழுதியதைத் தழுவியது.

(11 ஆம் பக்க தொடர்) **வணிகக் கல்வியும் கணக்கீடும்**

**சில்லறை வியாபாரி.**

நுகர்வோருக்கு பண்டங்களை விற்பனை செய்யும் கடைகள் சில்லறைக் கடைகள் எனப்படும். நுகர்வோருக்கு பாவனைக்குத் தேவையான பொருட்கள் வாங்கி விற்பவரை சில்லறை வியாபாரி என்போம். அவரிடம் எமது தேவைக்கு எமது கொள்வனவு ஆற்றலுக்கு ஏற்ற அளவுக்கு மிகக் கொஞ்சமாகவும் வாங்க முடிகின்றது.

உதாரணம்:- சீனி, பால்மா, கொப்பி, பென்சில், மெழுகுதிரி போன்றன.

**முகவர்**

முதல்வர் ஒருவரின் பணிகளையோ அல்லது சில பணிகளையோ புரிவதற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் முகவர் எனப்படுவார்.

**விற்பனை முகவர்**

உற்பத்தியாளர் சிலர் தமது உற்பத்திகளை விநியோகிப்பதற்கு நியமனம் செய்யும் முகவர்கள் விற்பனை முகவர் ஆவார். விற்பனை முகவர் மூலம் பெரும்பாலும் சேவைகளே நுகர்வோரைச் சென்றடைகின்றன.

உதாரணம்:- காப்புறுதி முகவர் சேவை, கடன் முகவர் சேவை, விமான நிறுவன முகவர் சேவை போன்றன.

**முகவர் மூல விநியோகத்தின் நன்மைகள்**

1. அதிக மூலதனத் தேவையை தவிர்க்கலாம்.
2. அதிக தொழிலாளர் தேவையை தவிர்க்கலாம்.
3. உற்பத்தியாளரின் வேலைப்பழு குறையும்.
4. உற்பத்தி வேலைகளில் உற்பத்தியாளர் முழுக் கவனத்தையும் செலுத்தலாம்.

**மொத்த வியாபாரி உற்பத்தியாளருக்கு ஆற்றும் சேவைகள்.**

1. மொத்த வியாபாரிகள் தாமே விளம்பரம் செய்வர்.
2. உற்பத்தியாளருக்கு முற்பணம் வழங்குவர்.
3. உற்பத்தியாளருக்கு ஆலோசனை வழங்குவர்
4. களஞ்சிய வசதி வழங்குதல்
5. மூலப்பொருள் இயந்திர சாதனங்களை பெற்றுக் கொடுத்தல்

**சந்தை**

கொள்வனவாளரும் விற்பனையாளரும் ஒன்று கூடும் இடம் அல்லது சந்திக்கும் இடம் சந்தை எனப்படும். சந்தையானது வாங்குவோரும் விற்போரும்நேரடியாக சந்திப்பதன் மூலமாகவோ அல்லது தொடர்பாடல் சாதனங்கள் மூலமாகவோ உருவாகலாம்.

**பொருட்சேவை சந்தையின் வகைகள்**

1. சில்லறை வியாபாரச் சந்தை
2. மொத்த வியாபாரச் சந்தை
3. மூலதனச் சந்தை
4. ஊழியர் சந்தை
5. பணச்சந்தை
6. சர்வதேசச் சந்தை

"சில்லறை வியாபாரச் சந்தை" இல் இருந்து "திறந்த சந்தை தொழிற்பாடு" வரை 18ஆவது ஆற்றல் இதழில் இக்கட்டுரை தொடரும்.

(12 ஆம் பக்க தொடர்) **தீயபாயக் காப்புறுதி**

**தீ அபாயக் காப்புறுதியின் வகைகள்.**

1. பெறுமானம் குறித்த காப்புறுதி

சொத்தின் பணப்பெறுமதி குறிப்பிடப்பட்டு ஏற்படுத்தப்படுகின்ற தீ அபாயக் காப்புறுதியினையே பெறுமானம் குறித்த காப்புறுதி குறித்து நிற்கும். இங்கு இரண்டு வகையான பெறுமானங்கள் முக்கியம் பெறுகின்றது.

1) உண்மைப் பெறுமதி
2) ஒப்பந்தப் பெறுமதி

உண்மைப் பெறுமதி என்றால் சொத்து ஒன்று நட்டமடைகின்ற வேளையில் சொத்தின் உடமையாளருக்கு ஏற்படுகின்ற இழப்பின் அளவினையே இது குறித்து நிற்கும். இது கொள்விலையாகவோ அல்லது சந்தை விலையாகவோ காணப்படலாம். ஆனால் ஒப்பந்தப் பெறுமதி என்றால் தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பணரீதியான பெறுமதியையே இது குறித்து நிற்கும். இவ் இரண்டு பெறுமதிகளையும் அடிப்படையாகக் கொண்டு தீ அபாயக் காப்புறுதியினை இரண்டு வகையாக பாகுபடுத்தலாம்.

1) மிகைக் காப்புறுதி
2) குறைக்காப்புறுதி

மிகைக்காப்புறுதி என்றால் சொத்து ஒன்றின் உண்மைப் பெறுமதியிலும் பார்க்க அதனது ஒப்பந்தப் பெறுமதி உயர்வாகக் காணப்படுமாயின் அதனைக் குறித்து நிற்கும். இங்கு சொத்தின் உண்மையான பெறுமதியிலும் பார்க்க உயர்வான பெறுமதி ஒன்றிற்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கும். மிகைக் காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்று நட்டமடைகின்ற வேளையில் பின்வரும் இரண்டு அடிப்படையில் நட்டஈடு வழங்கப்படும்.

1. பகுதியளவில் நட்டமடைதல்
2. முழுமையாக நட்டமடைதல்

மிகைக் காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்று பகுதியளவில் நட்டமடைகின்ற வேளையில் ஏற்பட்ட இழப்பினை திருத்துவதற்கான திருத்தச்செலவு நட்டஈடாக வழங்கப்படும். அதே போன்று சொத்து முழுமையாக நட்டமடைகின்ற வேளையில் ஏற்பட்ட நட்டம் நட்டஈடாக வழங்கப்படும். சிறப்பாக சொத்திற்கு சந்தைப் பெறுமதி இருப்பின் அதுவே நட்டஈடாக வழங்கப்படும்.

உ-ம்: A என்பவர் தமது 100,000/- பெறுமதியான கட்டிடத்திற்கு 125,000/-க்கு ஒரு மிகைக்காப்புறுதி செய்யப்படுகின்றது. அண்மையில் ஏற்பட்ட மண்பமுது காரணமாக சொத்து முழுமையாக நட்டமடைந்தது. நட்டமடையும் வேளையில் அதன் சந்தைப் பெறுமதி 80,000/- ஆகும். 80,000/- நட்டஈடு வழங்கப்படும்.

மிகைக் காப்புறுதி சொத்தின் உடமையாளர்களுக்கு மூடத்தனமாக ஓர் செயற்பாடாகும். ஏனெனில் சொத்தின் உண்மைப்பெறுமதியிலும் பார்க்க உயர்வான பெறுமதிக்கு கட்டணத்தினை செலுத்தி உண்மைப்பெறுமதியின் அளவால் நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வதேயாகும்.

குறைக் காப்புறுதி என்றால் சொத்தின் உண்மைப் பெறுமதியிலும் பார்க்க ஒப்பந்தப் பெறுமதி குறைவாக காணப்படுமேயாயின், அதனைக் குறித்து நிற்கும். இங்கு சொத்தின் உண்மைப் பெறுமதியிலும் பார்க்க குறைவான பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கும். குறைக்காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன்று நட்டமடைகின்ற வேளையில் பின்வரும் இரண்டு அடிப்படையில் நட்டஈடு வழங்கப்படும்.

1. முழுமையாக நட்டமடைதல்
2. பகுதியளவில் நட்டமடைதல்

பகுதியளவில் நட்டமடைகின்ற வேளையில் விகிதாசார அடிப்படையில் நட்டஈடு வழங்கப்படும். அதாவது உண்மைப் பெறுமதிக்கும் ஒப்பந்தப் பெறுமதிகளும் இடையிலான விகிதாசாரத்திற்கேற்ப நட்ட ஈடு வழங்கப்படும். இதனை பின்வருமாறு கணிப்படல்.

$$\frac{\text{ஒப்பந்தப் பெறுமதி}}{\text{உண்மைப் பெறுமதி}} \times \text{நட்டத்தின் அளவு}$$

சொத்து முழுமையாக நட்டமடைகின்ற வேளையில் ஒப்பந்தப் பெறுமதி நட்டஈடாக வழங்கப்படும். மிகைக் காப்புறுதியைப் போன்று குறைக்காப்புறுதி சொத்தின் உடமையாளர்களுக்கு மூடத்தனமான ஓர் நடவடிக்கையாகும். ஏனெனில் சொத்து முழுமையாக நட்டமடைகின்ற வேளையில் ஏற்பட்ட நட்ட அளவிலும் பார்க்க குறைவான பெறுமதியையே நட்டஈடாக பெறக்கூடியதாக உள்ளது. எனவே குறைக் காப்புறுதி முழுமையாக நட்டஈட்டினைப் பெற்றுத் தராது என்ற காரணத்தினால் அதுவும் மூடத்தனமானதாகும்.

**3. பெறுமானம் குறியாத காப்புறுதி**

சொத்தின் பணப்பெறுமதி குறிப்பிடாமல் ஏற்படுத்தப்படுகின்ற தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தினையே பெறுமானம் குறியாத காப்புறுதி ஒப்பந்தம் குறித்து நிற்கும். நட்டம் அடைகின்ற வேளையில் சொத்தின் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு வழங்கப்படும்.

( முற்றும் )

(17 ஆம் பக்க தொடர்) **ENGLISH LESSON 01**

பொதுவாக எதற்கும் விதிகள் இருக்கும். ஒவ்வொரு விதிக்கும் விதிவிலக்கு (EXCEPTION) இருக்கலாம். ஆனால், ஆங்கிலத்தில் பொதுவாக சகல விதிகளும் விதி விலக்கு கொண்டிருப்பவையாகவே காணப்படுகின்றன.

நாம் படிப்படியாக முன்னேறும் போது இயல்பாகவே ஆங்கிலத்தை பிழையின்றி எழுத கற்கலாம். இப் பாடங்களை ஒன்றாக சேர்த்துப் பேணுங்கள். பின் ஒரு கால் உதவும்.

ஆர்வம் உள்ளோர்க்கு: பிற்பகல் 5: 30 மணிக்கு 19 Metre ல் வரும் BBC யினது Learning Zone கேளுங்கள். அற்புதமான ஆங்கில விஷயங்கள் கிடைக்கும்.

(8 ஆம் பக்க தொடர்) **Sir Donald Bradman**

"Hogwash" என்பது கொச்சை (slang) மொழியில் இழிவாக கண்டிக்கும் சொல். பன்றி உளர்ந்த நீர் என்பதே தமிழாக்க கருத்து. எந்த விளையாட்டிலும், தோல்வியில் கோபம் கொள்வதும், ஆத்திரமடைவதும் கீழ்த்தரமான இழி செயல் என்பதற்கும், தோல்வியையும், தான் செய்த தவறையும் தயங்காது ஏற்றுக் கொள்ளும் பண்புள்ளோரே உயர்ந்தோர் என்பதற்கும் criterion is not the win, but how the game was played (பிரமாணமானது வெற்றியல்ல, ஆட்டம் எவ்வாறு விளையாடப்பட்டது என்பதே) என்ற பதத்திற்கும் Sir Don Bradman ஓர் உயிர் உதாரணமாகத் திகழ்ந்தார்.

(LMD சஞ்சிகையில் இருந்து தொகுக்கப்பட்டது).

(15 ஆம் பக்க தொடர்)




"Down the Red sea, then over and across Ethiopia and Kenya and so on. Everything was normal. No Airport suspected anything untoward.

"The convey carried well trained and much rehearsed commandos under colonel Jonathan Netanyahu; a large black Mercedes - Benz car with Iddi Amin's number plates; a huge man, the size of Iddi Amin who was blackened with shoe polish seated in the rear of the car; two Land Rovers filled with ten Israeli commandos in Palestinian uniforms, just as Iddi Amin's Palestinian bodyguards travel about with President Iddi Amin.

"The covey of planes entered over Kenya. The Hospital Plane pealed away and landed at Nairobi in Kenya. The communication and command plane climbed high to circle over Entebbe Airport. The four huge Hercules c- 130 s crossed the Kenyan border and slipped low over the vast Lake Victoria to reach Entebbe Airport on the other side.

"When the first Hercules landed at Entebbe the Benz car carrying the false Iddi Amin and Land Rover with Palestinian – like bodyguards rolled and reached the Terminal building of the Airport. The Ugandan soldiers who were guarding the Terminal building and the hostages within, sprang to attention and saluted.

"By now the rest of the commandos, under cover of darkness reached the Terminal Building and fired the first shots.

"It was all over in 15 minutes. The two terrorist hijackers were dead. So were three hostages and twenty Ugandan soldiers. The commander of the assault - force colonel Jonathan Netanyahu was shot dead by snipper in the control Tower. The rest, including the crew of the Air France plane went home aboard the Hercules c – 130s.

"When President Iddi Amin heard of the rescue raid he rushed the 23 miles from capital Kampala. And in humiliation ordered the immediate execution of the four Radar Operators on duty at the Entebbe Airport.

"This is nothing . . . he is the man who ordered hundreds of political opponents killed, by laying them in rows and breaking their heads with sledge – hammer, to save on expenses of bullets.

"The ultimate sad side of the story is that : the day before the rescue an elderly Jew woman hostage was taken to the hospital for treatment.

The day following the rescue operation she was pulled out of her hospital bed and killed", concluded Kennard uncle.

"Oh! No ...", mumbled the ever sympathetic Edith, with, "Damn sin", in unison from Judy and Maxmy.

முன்பு 1920 களில் **"நியூ யோர்க்"** நகரில் **உண்மையாக** நடந்தது. . .!

## "சாதுரிய செவிட்டு வியாபாரி"

இரு சகோதரர்கள் அமெரிக்காவினது **New York** நகரில் Ready Made உடை விற்பனை நிலையம் ஒன்றினை நடாத்தினார்கள். ஒருவர் Manager. இவர் விற்பனை நிலையத்தினது உள் அறையில் அதிகார தோரணையில் வீற்றிருப்பார். இவரது மேசையில் ரெலிபோன், பல நிறப் பேனா பென்ஸில்கள், பரவிய பல உத்தியோக தோற்றமான கடிதங்கள் தோன்றும்.

மற்றைய சகோதரன் தான் Salesman. வந்தோரை வரவேற்று, வியாபாரம் செய்வது அவரது கடமை. இவருக்கு சற்று நடிப்புத் திறன் இருந்தது. காலையில் இரு சகோதரர்களும் நிலையத்தைத் திறந்து, தத்தமது இடங்களில் ஆஜராகி, உறுமீன் வருமளவும் வாடி நிற்கும் கொக்குப் போலக் காத்திருப்பர்.

உடை வாங்கவென யாராவது நிலையத்தினுள் வந்தால் . . . புன்சிரிப்பு தவழும் இன் முகத்துடன், வந்தவரை வரவேற்பார் ஸேல்ஸ்மன் சகோதரன். எதையுமே காணாதவர் போல, முகாமையாளரான சகோதரன் படு சுறுசுறுப்பாக எதையோ எழுதித் தள்ளிக் கொண்டிருப்பார்.

தான் தேர்ந்த உடையினது விலை என்னவென வினவியதும், ஸேல்ஸ்மன் சகோதரன் அவ்வுடையை இரு கைகளாலும் வாங்கி, தலையைச் சற்றுச் சரித்து, உடையை நிதானமாக அவதானித்து, தேர்வைத் தான் மெச்சுவதாக ஊர்ஜிதம் செய்யும் புன்னகை ஒன்றினைப் பரப்பி, தலையை ஆமோதிக்கும் பாணியில் ஆட்டியபடி, முகாமையாளச் சகோதரனுக்கு உடையை உயர்த்திக் காட்டியபடி, "இதன் விலை என்ன?", என உரத்த குரலில் கேட்பார்.

முகாமையாளர், பதிலுக்கு, "உதோ. . . ம்ம்ம் . . . நாற்பது டொலர்", என்பார். செவிட்டு ஸேல்ஸ்மன், "என்ன. . . இருபது டொலரோ?", என இரைந்து கேட்பார். இதற்கிடையில், வாங்க வந்தவரிடம், செவிட்டு ஸேல்ஸ்மன், முணுமுணுப்பது போல, "உந்த மனேஜர் ஒரு செவிட்டு பசாசு, சொல்லுறது ஒண்டுமே உதுக்கு கேட்காது!", என்று தனது செவிட்டுத் தன்மையை ஊர்ஜிதம் செய்து கொள்வார்.

மீண்டும் தேர்ந்த உடையை உயரத் தூக்கிக் காட்டியபடி, "இதின்ரை விலை இருபது டொலரோ? ", என இரைவார். மனேஜரும், "ஓம் . . . ஓம் . . . நாற்பது டொலர் . . . எத்தனை தரம் சொல்வது?", என கோபமாகக் கேட்பார். ஸேல்ஸ்மனும் சகலதும் விளங்கியது போல, தலையை ஆட்டிக் கொண்டு, "ஆ. . . இருபது டொலராம்", என கூறிக் கொண்டு, உடையை பார்ஸல் செய்யத் தொடங்குவார்.

வாங்க வந்தவரோ அவசரப்பட்டு, நுனிக் காலில் நிற்பார். நாற்பது டொலர் சாமானை இருபது டொலருக்கு அமுக்கிக் கொண்டு போக வேண்டுமே!

பார்ஸலைக் கொடுத்து விட்டு, இருபது டொலரை எண்ணிப் பெற்றுக் கொண்ட ஸேல்ஸ்மன் சகோதரன், மனேஜர் சகோதரனிடம் ஒப்படைப்பார். உடை வாங்கியவரோ ஓட்டமும் நடையுமாக பார்ஸலுடன் ஓடியே போய் விடுவார்.

இரு சகோதரர்களும், கை குலுக்கி, அட்டகாசமாகச் சிரித்து, பத்து டொலர் உடையை இருபது டொலருக்கு விற்ற சாமார்த்தியத்தைக் கொண்டாடுவார்கள்.

ஜவன் சுரேஸ், மெல்கேர்ண் நகர், ஒஸ்றேலியா.

## Old money-lender and wily lass

An old money-lender offered to cancel a debt of a merchant and keep him from going to prison if the merchant would give the money – lender his lovely daughter.

Horrified yet desperate, the merchant and his daughter agreed to let providence decide.

The money-lender said he would put a black pebble and a white pebble in a bag and the girl would draw one. The white pebble would cancel the debt and leave her free. The black one would make her the money - lender's, although the debt would be canceled. If she refused to draw, her father would go to prison.

From the pebble-strewn path they were standing on, the money-lender picked two pebbles and quickly, in the blink of an eye, put them in the bag, but the girl noticed he had picked up two black ones.

What would you have done if you were the girl?

By Dan P. Rajah,
Melbourne City, Australia.

Answer

When the girl put her hand into the bag to draw out the fateful pebble, she fumbled and dropped it, where it was immediately lost among the others.

"Oh!", she said, "Well, you can tell which one I picked by looking at the one that's left in the bag".

The girl's lateral thinking saved both her father and herself.

---

## 2000 ஆண்டு நோபல் பரிசுகள்:

1) இலக்கியம்:- V.S.Naipaul. இவர் ஓர் இந்திய நாட்டவர். ஆங்கிலத்தில் எழுதுபவர். பல காலமாக இங்கிலாந்தின் Oxford பல்கலைக் கழக கிராமத்தில், அமைதியாக வாழ்கின்றார்.

2) சமாதானம்:- UNO ( ஐநா சபை ) அதனது செயலாளர்.Coffee Annan இவர் 63 வயதினரான மேற்கு ஆபிரிக்க நாடான Ghana (கானா) நாட்டவர். தற்போது 2வது தடவையாக ஐநா சபையின் செயலளராக பணிபுரிகின்றார். முன்னர் ஐநா சபையின் பல பிரிவுகளில் உயர் அதிகாரியாக பதவியீட்டீயவர். இராஜதந்திர சேவையில் இளம் பராயம் தொட்டு தொடர்கின்றார்.

## உங்கள் கேள்விகள். ..... ..!??

(1) G.M செபஸ்தியாம்பிள்ளை, முதநிலை, தரம் I, விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.

கேள்வி: "ஓர்", என்பதையும்" "ஒரு" என்பதையும்" பிரயோகிப்பதற்கு தமிழ் இலக்கண விதி உள்ளது. உயிர் எழுத்தினால் தொடங்கும் சொல்லிற்கு "ஓர்" எனவும் மெய் எழுத்தினால் தொடங்குவனவிற்கு "ஒரு"என்ற பதமும் பாவிக்க வேண்டும். இவ்விதியை ஏன் "ஆற்றல்" மீறுகின்றது?

பதில்: கடந்த 60 ஆண்டுகளில் இவ் விதியை நான் குறுக்கிடவில்லை. பிழையை சுட்டிக் காட்டியதற்கு எனது மனமார்ந்த நன்றிகள். தங்களைப் போன்றோரது அறிவுறுத்தல்கள் எம்மை நிற்சயம மேம்படுத்தும்!

(2) சோபி மக்ஸ்மினி, பரிஸ் நகர்.

கேள்வி: பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுத்த முதல் நாடு?

பதில்: சம அந்தஸ்து பற்றி தெரியாது. வோட்டுரிமையில் சம அந்தஸ்து வழங்கியது: தென் பசுபிக் சமுத்திரத்தினது 1,112 ஏக்கர் நிலம் கொண்ட Pitcairn Island (பிற்கேய்ன் தீவு). அதன் 09 அங்கத்தவா கொண்ட பாராளுமன்றம் 1838 ல் முதன் முதல் வழங்கியது. HMS Bounty என்னும் ஆங்கிலேய கப்பலை Lieutenant William Bligh இடம் இருந்து Captain Fetcher Christian 1789 ல் கைப்பற்றினான். தனது நண்பர்களுடன் பிற்கேய்ன் தீவில் Taihiti தீவுப் பெண்களுடன் வாழ்ந்தான். (RD 02 1985)

(3) சுமித்திரா பா.ராஜா, Glenmore, Victoria

கேள்வி: Britain ல் அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவரை Mister எனவும், அறுவைச் சிகிச்சை செய்யாத ஏனைய மருத்துவரை Doctor என்றும் அழைப்பது வழக்கமாமே?

பதில்: ஆம். முன்பு Physicians மருத்துவம் படித்துள்ளோர் என்பதால் "Doctor " எனவும், அறுவைச் சிகிச்சை செய்யும் Surgeons பொதுவாக Barber (தலையலங்காரம் செய்வோர்) தொழில் புரிவோரானதால் அவர்களை "Mister" எனவும் அழைத்தனர்.

மேலும், Britain ல் மருத்துவர் MB பட்டம் பெறுவர். US அமெரிக்காவில் MD பட்டம் பெறுவர். (Bachelor of Medicine, Doctor of Medicene) இரண்டு பட்டங்களும் தரத்தில் ஒன்றே தான். (இவ் விபரத்தை Jonathan Kellerman எழுதிய "Over the Edge" எனும் புத்தகத்தில் இருந்து பெற்றோம்).

(4) V. யோகநாதன், நுணாவில்.

கேள்வி: தாய்வான் தீவுக்கும் ஆசியா கண்டத்தின் மிகப் பெரிய நாடாகிய சீனாவுக்கும் இடையில் உள்ள முறுகல் நிலை பற்றி . . . !

பதில்: தாய்வான் தன்னிடமிருந்து பிரிந்த, ஆனால் தனக்கு சொந்தமான, தீவு என்கிறது சீனா. ஆனால், Chen Shui – Bian என்னும் தாய்வான் ஜனாதிபதி, "கொம்மியூனிஸ" கொள்கை கொண்ட சீனாவுடன் நாம் இணைய மாட்டோம், என்கின்றார்.

உலகத்தின் 14வது நாடாக பொருளாதார வளர்ச்சியடைந்த தாய்வான் பிற நாடுகளில் 110 Billion Dollars பெறுமதியான சேமிப்பு கொண்டுள்ளது.

தாய்வான் ஜனாதிபதி USA சென்ற போது, தினமும் சீனா தாய்வான் க்கு மேலாக, தென்-சீனா கடலுக்குள் விழும்படி ஏவுகணைகளை எய்து அச்சுறுத்தியது.

(5) ம.தனேந்திரகுமரன், யாழ் கச்சேரியடி.

கேள்வி: இவ்வருடம் 8ஆம் திகதி 9ஆம் மாதம் இரவு யாழ் சேவை ஒலிபரப்பில் முதன்முதல் சந்திரனில் மனிதன் இறங்கியதும், அராபி பாஷையில் தான் மனித குலத்திற்கு அறிவித்தல் கொடுத்தான் என்றார்கள். நீர் என்னடா என்றால், ஆற்றல் 16ல் முதலாவது கேள்வியின் விடையில் ஆங்கிலத்தில் தான் Niel Armstrong சொன்னார் என்றுள்ளீரே?

பதில்: எனது சிறிய அறிவுக்கு எட்டியபடி அமெரிக்கா வின் Armstrong தான் சந்திரனில் முதல் கால் பதித்த மனிதன். தனது தாய் மொழியை தவிர்ந்து அராபி பாஷைக்கு ஏன் போனார் என்பது தெரியாத விஷயம். சாதகமான பொய்களை உருவாக்குவோர் உள்ளனர். யாழ் சேவையிடம் கேட்டு பதில் தருவோம்!

(6) S. சிவபாலன், யாழ் நகர்.

கேள்வி: சர்வதேச நீதி மன்றம் ஹேக் நகரிலும், ஸ்ற்றாஸ்போர்க் நகரிலும் உள்ளதாமே! ஏன் இரண்டு?

பதில்: Netherland நாட்டு Hauge நகரில் War Crime Tribunal (போர் குற்ற விசாரணை குழு) இயங்குகின்றது. Serbia நாட்டு ஜனாதிபதி Slobodan Milesovich 02 மிலியன் Bosnia முஸ்லீம் மக்களை கொன்ற குற்றத்திற்கும், ஏனைய போர்களில் புரிந்த அட்டூழியங்களுக்கும் விசாரணை செய்யப்படுகின்றார். சற்று மன நோய்வாய்ப்பட்டவர் போலத் தோன்றும். இவர் தன்னை விசாரிக்க இந்த அமைப்புக்கு அதிகாரம் இல்லை என்றிருக்கின்றார்.

France நாட்டினது Strasbourg நகரில் உள்ளது European Court of Human Rights. அதாவது, ஐரோப்பிய மனித உரிமை நீதி மன்றம்.

(7) க.ருபசுந்தரி, பாண்டியன் தாழ்வு.

கேள்வி: மனம் என்றால் என்ன?

பதில் : சிறு வயதில், கணக்குப் பாடநேரத்தில், இரு தானங்களைக் கூட்டப் பழகும் போது, "பெரிய தானத்தை மனதில் வை. சிறிய தானத்தை கை விரல்களில்", என்றனரே ஞாபகமா? அந் நாட்களில் எங்கு வைத்தீரோ அது தான் மனம்.

(8) R.A ஜேசுநேசன், சின்ன புதுகுளம், வவுனியா.

கேள்வி: சக ஊழியரைப் பற்றி மேல் இடத்தில் கோள் சொல்லுபவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

பதில்: மனைவி மீது நம்பிக்கையில்லா நோக்கும், பிற பெண்கள் மீது கயவனின் பார்வையும், கோள் சொல்லும் அறிவிலி மட்டையும், ஒரே குட்டையில் ஊறினவை தான்! இம் மூவருக்கும் எம் மனதில் இடமில்லை!!

(35 ஆம் பக்கம் பார்க்க)

பொது அறிவு – துணுக்குகள்

01.சென்ற மாதம் US Open Tennis Tournament நடைபெற்றது. இது அமொரிக்காவினது New York மாநிலத்தில் நடைபெற்றது. இப் போட்டி நடந்தேறிய இடத்தின் பெயர்:

Flushing Meadows;

02.Tennis உலகின் WTA Ranking ல் தொடர்ந்து 06 வருடங்களாக Top Rank ல் கணிக்கப்பட்ட Tennis வீராங்கனை:

Martina Navratilova;

03. Soccer (கால்பந்தாட்டம்) Matches களில் 1, 000 Goal களுக்கு மேலாக தேசிய, சர்வதேச ரீதியில் அடித்த நபர்:

B றேஸில் (Brazil) நாட்டு Pele

04. Mexico நாட்டில் நடைபெற்ற World Cup இறுதிப் போட்டியில் Refree காணாதவாறு கையினால் அடித்து Goal போட்டார். அவரது நாடு வெற்றியீட்டியது. மறு நாள் பத்திரிகையாளர்கள் மத்தியில் ஓர் கேள்விக்கு விடையளிக்கையில் "That's hand of God" (அது கடவுளின் கை) எனக் கூறியதும், இவரை படு கேவலமாக எழுதி அவமானப்படுத்தினார்கள். யார் இவர்?

அர்ஜன்ரீனா நாட்டு Diego Maradona

05. அண்மையில் ஓர் இராஜகுடும்பத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களது நாடு:

Nepal.

06. கடந்த 50 வருடங்களில் இரு நாடுகளுக்கிடையில் நான்கு தடவை போர் வெடித்த நாடுகள்:

India Vs Pakistan;

07. கவிஞர், ஓவியர், கலைத்துறைக் கல்விக்கென ஓர் ஆச்சிரமத்தை ஆரம்பித்தவர், தனது நாட்டு நிராயுதபாணிகளான பொது மக்களை கொலோனித்துவ ஆட்சியாளர்களது இராணுவ General Dyer என்றவர் ஓர் சதுக்கத்திலிருந்து தப்பி ஓட சந்தர்ப்பமளிக்காது நூற்றுக் கணக்கானோரை Machine Gun னால் சுட்டுக் கொன்றார்.இச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக தனது "Sir" பட்டத்தை "வேண்டாம்" என திரும்ப அனுப்பியவர்:

ரவீந்திரநாத் தாகூர்;

08. தனது நாட்டினது ஜனாதிபதியாக பதவி வகித்த பின்னர், தொடர்ந்து பதவியில் வீற்றிருக்காது, பெருந்தன்மையாக, இளைய சமுதாயத்தினர்க்காக பதவியை விட்டு விலகியவர் தென் ஆபிரிக்கா வினது **நெல்சன் மண்டேலா**. இவரைப் போன்று ஆபிரிக்க கண்டத்தின் இன்னோர் நாட்டினது ஜனாதிபதி தாமாக பதவி விலகினவர்:

ஜுலியஸ் நைறேறே. **Tanzania** நாட்டவர்

09. தான் விரும்பிய பெண்ணை திருமணம் புரியவென தனது அரசு முடியைத் துறந்த 19ஆம் நூற்றாண்டு அரசன்:

பிரித்தானியாவினது 8 வது எட்வேட் மன்னன்.

10. தான் விரும்பிய பெண்ணை திருமணம் புரியவென தனது நான்கு பட்டத்தரசிகளை சிரச்சேதம் செய்த அரசன்.

பிரித்தானிய அரசனான 8வது ஹென்றி

11. முதன் முதலாக ஒரே ஒலிம்பிக் விளையாட்டில் நான்கு தங்க பதக்கங்களை ஓட்டப் போட்டிகளில் பெற்றவர்:

அமெரிக்க கறுப்பு இன ஜெஸி ஒவன்ஸ் (Jesse Owens), 1938ம் ஆண்டு ஜேர்மனியின் Munich( மியூனிக்) நகரில்,

12 முன்னாள் திரைப்பட நடிகர், பிரபல்யமானவர், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் பொருளாதார கனவுக் குற்றச்சாட்டில் விசாரணைக்காக மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்:

பிலிப்பைன்ஸ் நாட்டு முன்னாள் ஜனாதிபதி ஜோசப் எஸ்ற்றாடா.

13 துப்பறிந்து எழுதி, ஊழல்களை அம்பலப்படுத்தி, நாட்டின் நலம் காக்கும், 42 வயதினரான, பத்திரிகையாளர், மெலிதான குரலுடன் சிறிய உருவம் கொண்ட இந்த பெண் நிருபர் மீது குற்றம் புரிவோர் சற்றும் ஐயம் கொள்ளாததால் வகையாக மாட்டுப்படுகின்றனர். தனது நாட்டினது ஜனாதிபதி பதவி இழக்க இவரே காரணகர்த்தாவாக இயங்கியவர்:

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஷீலா கொறொறல்,

14. ஒரு நாட்டில் இரு வகையினரான மக்கள் இருந்தனர். ஒரு வகையினர் எதற்கும் பொய் சொல்பவர்கள். முற்றவவையர் உண்மை மட்டுமே பேசுபவர்கள். வேலைக்கு ஆட்கள் சேர்ப்பதற்காக ஒருவர் அந்த நாட்டிற்கு விஜயம் செய்து நேர்முகப் பரீட்சை மூலம் தேர்வு செய்தார். நயவஞ்சகமில்லாத இன்முகத்துடன் தோன்றிய விண்ணப்பதாரி, எனக்குப் பின்னால் வர இருக்கும் நபர், தான் போய் சொல்பவர் என என்னிடம் கூறினார் என்றார்.

இவர் கூறியது எந்த வகையைச் சாரும்? "பொய்"? "உண்மை"?

பொய் சொல்கின்றான் எந்தவொரு பொய்யனும் தான் பொய் சொல்பவன் என ஏற்றுக்கொள்ள மாட்டான்.

15. ஐந்து நபர்கள் ஓர் ஓட்டப் போட்டியில் பங்கு பெற்றனர். இரு நபர்கள் சமமாக வரவில்லை. (TIE). கஜன் முதலாவதாக வரவில்லை. சேல்வம் முதலாவதாவோ, கடைசியாகவோ வரவில்லை. குமார் கஜனுக்கு அடுத்ததாக வந்தான். ஜெயம் இரண்டாவதாக வரவில்லை. பகீரதன் ஜெயம் என்பவருக்கு இரு இடங்களுக்கு பின்னால் வந்தான். இந்த ஐவரும் எவ்வாறு போட்டியை ஓடி முடித்தனர்?

ஜெயம் முதலாவது இவனுக்குப் பின்னால், முறையே: செல்வம், பகீரதன், கஜன், கடைசியாக குமார்.

16 Ceylon என்பதை Sri Lanka என பெயர் மாற்றம் செய்தது போன்று, Constantionple என்னும் நகரது மாற்றம் செய்யப்பட்ட பெயர்:

Istanbul

17 ஓர் நத்தை 20 அடி ஆழமான கிணற்றில் இருந்து மேலே ஏறி நகர்கின்றது. ஒவ்வொரு நாளும் 03 அடி ஏறும் நத்தை, இரவில் 02 அடி சறுக்கி கீழே வளுகிச் செல்லும் எத்தனை நாள் எடுக்கும் நத்தை கிணத்தை விட்டு வெளியே செல்ல?

18 நாட்கள், 18ஆம் நாள் நாத்தை 20 அடி மட்டத்தை எட்டி வெளியேறும். அன்று அது கீழே சறுக்க தேவை இல்லை.

18 உங்களது புத்தகங்கள் அடுக்கி வைக்கும் இறாக்கையில் 03 பாகங்கள் கொண்ட புத்தகங்களை, வளமை போன்று இடம் இருந்து வலமாக, அடுக்கி வைத்துள்ளீர்கள். ஓர் புத்தக பூச்சி அவற்றை அரிக்கத் தொடங்கியது. புத்தகங்களின் ஒவ்வொன்றினது பக்கங்கள் 02 அங்குல அகலமாகும். ஆவற்றின் கவர்கள் (covers ஆற்றல்-17 ) ஒவ்வொன்றும் அரை அங்குல அகலம். புத்தக பூச்சி முதலாவது பாக புத்தகத்தின் முன் பக்க Cover

வெளிப்பக்கத்தில் அரிக்கத் தொடங்கி, 03 வது பாக புத்தகத்தின் கடைசி பக்கம் வரைக்கும் அரித்தால், எத்தனை அங்குலம் அரித்திருக்கும்?

$3\ ^1/_2$ அங்குலம். உங்களது shelfல் 03 புத்தகங்களை அடுக்கிய பின் அவதானியுங்கள். பூச்சி முதலாம் பாகத்தின் முன் cover ல் தொடங்கி, 02ஆம் பாகம் ஊடாக அரித்தால், அது முதலாம் பாகத்தின் பக்கங்களை அரித்திருக்கவேமாட்டாது! இரண்டாம் பாகம் அதன் cover களுடன் 03 அங்குலமாகும். (02 + ½ + ½) அதனுடன் 03ஆம் பாகத்தின் பின் பக்க cover ல் மட்டுமே பூச்சி அரித்துள்ளதால் இன்னுமோர் ½ அங்குலம் அதிகரிக்கும்.

(36 ஆம் பக்கம் பார்க்க)

---

(32 ஆம் பக்க தொடர்)

## உங்கள் கேள்விகள்

(9) ச.சந்திரமோகன், நல்லூர்.

கேள்வி: எனது அண்ணா எதற்கெடுத்தாலும் என் தலையில் குட்டுகிறானே!

பதில்: விபரம் போதாது. . . இருந்தும். . .
ஒன்று உம்மில் அவனுக்கு ஏதோவொரு எரிச்சல். . . மற்றது, அவரும் ஒரு நாள் பலம் குன்றிய கிழவனாகத் தானே ஆக வேண்டும்!

(10) செ.மாறீ கொன்ஸெப்ஷன், இளவாலை.

கேள்வி: சகல பாடங்களிலும் வலுசுட்டியான என் தங்கை, பொது அறிவில் வெகு மோசமாக உள்ளாளே! என்ன செய்யலாம்?

பதில்: எனது ஆசான் திருலிங்கநாதன் கூறியது ஞாபகம் வருகின்றது:
"கண்டது கற்றதும் பண்டிதனாவான்" என்று சொல்வார்கள். அது பிழை. கண்டறிந்து கற்றதும் . . . என்றே வரவேண்டும்.
எனவே, பாடப் புத்தகங்களில் மட்டும் கவனம் செலுத்தாது, ஏனையவற்றையும் தேர்ந்து வாசிக்க வேண்டும், வாசித்தோருடன் உரையாட வேண்டும், வீட்டிலும் நீங்கள் நல்ல விஷயங்களைப் பற்றி கதைக்க வேண்டும்!

(11) செல்வி தனேந்தினி, சுண்டுக்குழி மகளிர்.

கேள்வி: சோதனையில் சித்தியடைய சுருக்கமான வழி உள்ளதா?

பதில்: உண்டு. கடைசி நேரத்தில் விழுந்து, விழுந்து பாடமாக்கிப் படித்தால், மனம் சோர்ந்து ஞாபக சக்தி குன்றிப் போகும். . . அப்போ குண்டு தான்! தினமும் படித்த பாடத்தை, படுக்கை செல்ல முன் தவறாது அசை போட்டால் கேள்வி பத்திரிகையை படித்ததும் "பளிச்" சென விடை மனதில் உதிக்குமே! என்ன இன்பம்!!

(12) சோ. மனோரஞ்சினி, மருதநார்மடம்.

கேள்வி: தினமும் பாடசாலைக்கு லேற்!

பதில்: இரவில் படுக்கை செல்லமுன், மறுநாள் பாட புத்தகங்களை bag ல் அடுக்கும், தினமும் பாடசாலைக்கு early.

(முற்றும்)

(35 ஆம் பக்க தொடர்) **பொது அறிவு**

19) Peru: தென் அமெரிக்க கண்டத்தின் நாடு௦௦ ஜனாதிபதி Alejandro Toledo முன்னைய ஜனாதிபதி Alan Garcia வை June 2001 தேர்தலில் வென்றவர்௦௦௦. சிறுவனாக சப்பாத்து துடைத்தவர். அமெரிக்காவில் பொருளியல் பட்டம் பெற்றவர்௦௦௦.World Bank ஆலொசகர்௦௦௦. முதலாவது "செவ்இந்திய" மகன்.

20) Cuba: ஜனாதிபதி Fidel Castro, 74 வயது௦௦௦ முன்னைய சர்வதிகாரி Fulgenico Batista வை ஆயுதப் புரட்சியால் 01.01.1959ல் வென்றவர்.

21) Macedonia: முன்னைய Yugoslavia வினது ஓர் அங்கம்௦௦.Boris Trajkevksi பிரதமர்... சிறுபான்மை அல்பேனியருக்கு உரிமை வழங்க தயக்கம் கொண்டவர்.

22) Canada: பிரதமர் Jean Chretien.

23) Iran: இஸ்லாமிய ஈரான் ய் ஸ்த்தாபித்தவர் Ayatollah Ruhollah Khomenei இன்றைய தலைவர் Ayotallah Ali Khamenei ௦௦௦ பழமை விரும்பி௦௦௦ நாட்டுத் தலைவர் (Chairman)௦௦௦ இஸ்லாமிய மத குரு Dr. Mohamed Hatami, ஜனாதிபதி 2வது தடவையாக அமோக வாக்குகளால் தேர்தல் வெற்றி௦௦௦ புதுமை விரும்பி௦௦௦ . இவரும் மத குரு

24) Unite Nations War Crimes Tribunal: ஐநா சபையின் போர்க் குற்ற விசாரனைக்குழு௦௦௦. நெதர்லாந்து நாட்டினது, Hauge ( ஹேக்) நகரில்௦௦௦ Chief Prosecutor (வழக்குத் தொடரும் தலமையதிகாரி). Carla Del Ponte௦௦௦ காரசாரமான பெண்மணி ௦௦௦ கொடுங்கோற் கொலைகாரன் Sl௦௦௦b௦௦௦dan Milosevich ய் WCT யிடம் ஒப்படைத்ததில் இவருக்கு பெரும் பங்கு௦௦௦ வழக்கு விசாரனையில் தளராதவர் என புகழ் பெற்றவர்.

25) UNHCR: பிரதமதிகாரி Rund Lubbers 61 வயது ௦௦௦ 12 வருட நெதர்லாந் நாட்டு பிரதமர்.

26) East- Timor: இந்தோனேசியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற கொரில்லா யுத்த தலைவர் X anana Gusmao.
சமாதான நொபெல் பரிசு பெற்ற றோமன் கத்தோலிக்க மத ஆயர் Carlos Filipe Ximenes Belo ௦௦௦ அனர்த்தம் விளைவித்தோரை மன்னித்து நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதில் வழுவாது தீவிரமாக நிற்பவர்.

27) Syria: ஜனாதிபதி Bashar Assad, 34 வயது ௦௦௦ London ல் படித்த கண் டொக்ரர் ௦௦௦ தந்தை Hafez Assad 2000ல் இறந்ததும் பதவி ஏற்றவர்

28) Jordan: மன்னர் Abdullah II,39 வயது ௦௦௦ இங்கிலாந் Oxford University பட்டதாரி ௦௦௦ தந்தை Kink Hussein 1999ல் இறந்ததும் சிம்மாசனம் ஏறியவர்௦௦௦ முற்போக்குவாதி ௦௦௦ தீவிரவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்தவர்.

வெளியீடு:- **ஆற்றல் மேம்பட்டு ஒன்றியம்.**
76,கண்டி வீதி , சுண்டுக்குளி , யாழ்ப்பாணம்.
பதிப்பு:- **கரன் பிரின்ரேர்ஸ்.** 303, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி , யாழ்ப்பாணம்.
திகதி:- ஆற்றல் 17 வது இதழ்: 22 / 10 / 2001